புதுமலர்: 15 புரட்டாதி - ஐப்பசி இதழ்: 05

# அனல்

01.09.2018

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்;
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## சலாக்கியத்துக்குள் ஒரு நிந்தனை

## நிந்தனைக்குள் ஒரு சலாக்கியம்

## அதிகாரம், வல்லமைக்குள் ஒரு மௌனம்

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

பக்கம்: 36 ஆண்டு: 2018 ஆசிரியர்: வே.மகாராஜா

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்
02. அனலின் ஆன்மீக விருந்து
03. சிறுவர் வட்டம் - அதிசயப்பரிசு
04. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல்
05. தேவபணியாளர் பட்டறை
06. பெலப்படுத்தும் கிறிஸ்து
07. பெண்கள் பக்கம்
08. நற்செய்திப்பகுதி
09. அருட்பணியாளர் சரிதை - பீட்டர் கிளேவர், நவமணி அன்னபாய்
10. குறுக்கெழுத்துப்போட்டி - 87
11. கதையும் கற்றதும்
12. நம்மிடம் தவறு இருந்தால்
13. வினா விடை - 89




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**



**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**



**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**ஆசிரியர் "அனல்",**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**
**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**



*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -




# அனலின் சத்தம்

அனலின் வாசக நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த எட்டு மாதங்களையும் கடந்து வர கிருபை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரங்கள். ஆண்டவர் இயேசுவின் மாறாத அன்பினாலே நாம் மீட்கப்பட்டோம். கிறிஸ்து எமக்குரிய மீட்புக்காக செலுத்திய கிரயம் அவர் தம் ஜீவனே. எமது புதுவாழ்விற்கான கிரயம் கிறிஸ்துவின் ஜீவனே.


தம் உயிர் ஈந்து எம்முயிர் காத்த தேவாதி தேவன் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து தம்மிடம் வரும் அனைவரையும் ஏற்றுக்கொள்ள ஆவலாய் இருக்கின்றார். நித்திய வாழ்வைத்தரும் நேசமுள்ள ஆண்டவர் உன் வாழ்வை பிரகாசிப்பிக்க உன்னை அழைக்கிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசி! விசுவாசத்தில் நிலைத்திரு! தேவனுடைய பிள்ளை என்கின்ற ஸ்தானத்தைப் பெற்றிடு. உன் வாழ்வில் எஜமானாய் அவரை அனுமதி. உன் துக்க நாட்கள் சந்தோஷமாய் மாறும். அவர் உன்னை ஆசீர்வதிப்பார்.

– ஆசிரியர் –






❑ போதகர் வேதநாயகம் மகாராஜா




**கிருபை பெற்றாலே போதும்; அதற்குள் ஒரு நிந்தனையா? என்று யோசிக்கலாம். சலாக்கியம் என்றாலே ஆசீர்வாதம் தான்; ஆனால் அதற்குள்ளும் ஒரு துன்பமா?** இன்றைக்கு அனேகர் நொந்துபோய் வேதனையோடு என்னுடைய வாழ்வில் ஆண்டவர் இதைச் செய்யவில்லையே, கர்த்தர் என்னைக் கைவிட்டுவிட்டாரா? என்ற கேள்விகளோடு இருக்கலாம். அல்லது இப்படியான நிந்தைக்குள் செல்கிறேனே! ஏன்? என்று யோசிக்க முடியும். சலாக்கியத்திற்குள் நிந்தனை இருக்கும்; நிந்தனைக்குள் சலாக்கியமும் இருக்க முடியும்.

# 01. சலாக்கியத்தில் நிந்தனை

**லூக்கா 1:28 அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்ற வளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கி றார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக் கப்பட்டவள் என்றான்.** மரியாளுக்கு தேவதூதன் சொல்கிற வார்த்தை அந்த நாட்களிலே யாருக்கும் கிடைக்காத வார்த்தை.

1. **கிருபை பெற்றவளே வாழ்க!**
2. **கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்!**
3. **ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக் கப்பட்டவள்!**

மூன்று பெரும் ஆசீர்வாதமான அல்லது சலாக்கியமான அறைகூவல் தேவதூதனால் மரியாளுக்கு கிடைத்தது. ஆண்டவர் உங் களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை தந்திருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒருவிதத்தில் ஆசீர்வாதமாக இருக்கி றீர்களா? நாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதே ஒரு ஆசீர்வாதம். எங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருப்பதே பெரிய கிருபை. ஆண்டவர் என்னுடைய பாவங்களை மன்னித்து என்னை இரட்சித்திருக்கிறார். அதே பெரிய கிருபை. அதற்குள்ளும் நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று யோசிக்கலாம். மரியாளுக்கு சிறப்பான வார்த்தை. சலாக்கியம் பெற்ற பெண், தேவனுடைய பிரதிநிதியாக தேவதூதன் வந்து வாழ்த்துகிறான்: **"உலகத் தின் இரட்சகர் இயேசு உன் வயிற்றில் பிறப்பார்"** என்று சொல்கிறான். **"பரிசுத்த ஆவியானவர் உன் மேல் நிழலிடுவார், நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்"** என்று சொல்கிறார்.

சலாக்கியத்திற்குள் ஒரு சலாக்கியம், உலகத்தின் இரட்சகரைப் பெற்றெடுப்பாய் என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட சிறப்பான வார்த்தையைக் கேட்ட போது மரியாள் சொன்ன பதில்: **லூக்கா 1:38 அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்ட வருக்கு அடிமை, உம்முடைய வார்த்தை யின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்தி லிருந்து போய்விட்டான்.** சலாக்கியம் பெற்ற, ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணுக்கு, கிருபை பெற்ற பெண்ணுக்கு, உலகத்தின் இரட்சகரை சுகமக்கிற பாக்கியம் பெற்ற பெண்ணுக்கு, நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்பு அவளைத் தள்ளிவிடலாம் என்று யோசிக்கி றான். ஏனென்றால் தனக்கு மரியாள் நிச்சயிக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் திருமணத் திற்கு முன்பே அவள் வயிற்றில் குழந்தை இருந்தது. வேதம் சொல்கிறது: **அவன் நீதிமானாய் இருந்தபடியால் அவளை இரகசியமாய் தள்ளிவிடலாம்** என்று யோசித்தான். மரியாளின் வாழ்வைக் குறித்து வேதவிற்பன்னர்கள் சொல்வது என்னவென் றால்; **"உலகத்தின் இரட்சகரை அவள் தன் வயிற்றிலே சுமந்த போது மிகவும் தாங்க முடியாத துன்பத்தை தன்னுடைய வாழ்விலே சுமந்தாள்".**

கிருபை பெற்றவள் என்று வாழ்த்தப்பட்ட மரியாள் பெரிய நிந்தைகளை தன் வாழ்வில் சுமந்தாள். *திருமணமாகாமல் வயிற் றில் குழந்தையை சுமப்பது என்றால் அந் நாட்கள் என்றாலும் சரி இந் நாட்கள் என்றாலும் சரி அது நிந்தனைக்குரியது. எல்லாருக்கும் அதன் தார்ப்பரியம் புரியும்.* சலாக்கி யம் பெற்ற மரியாளுக்கு நிந்தை, அவமானம். எங்களுடைய வாழ்க்கையில் தேவனிடமி ருந்து எத்தனையோ சலாக்கியங்களைப்

பெற்றிருக்கிறோம். ஆனால் அதன் சரியான தார்ப்பரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்; மரியாள் அதைப் புரிந்து கொண்டாள். அவள் கிறிஸ்துவோடு சேர்ந்து நிந்தனையையும் சுமந்தாள். **வாழ்த்துதலோடு சேர்ந்து மக்களுடைய அவமதிப்பையும் சுமந்தாள்; போற்றுதலோடு சேர்ந்து மக்களுடைய தூற்றுதலையும் சுமந்தாள்.** ஆசீர்வாதமான வார்த்தையோடு சாபமான வார்த்தைகளையும் சுமந்தாள். ஏனென்றால் மரியாளுக்குத் தெரியும்: தான் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்கிறேன். மக்கள் என்னைக் குறித்து நினைப்பதெல்லாம் தேவன் தந்த சலாக்கியத்தோடு ஒப்பிடுகிற போது அதிலே ஒன்றும் இல்லை என்று.

உண்மையில் உங்களுக்குள் கிறிஸ்துவை வைத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள் என்றால் நிந்தனை அவமானங்களை கண்டு தேவனுடைய சித்தங்களை இடைநடுவில் நிறுத்திவிடக் கூடாது. *எமது தேசத்தில் அண்மையில் நடைபெற்ற காரியம்: குழந்தையைப் பெற்று அதைத் துணிகளினால் சுற்றி யாரும் இல்லாத இடத்தில் வீசிவிட்டு சென்றுவிட்டார்கள். பின் அந்தக் குழந்தையைக் கண்டு யார் இவ்வாறு செய்தது என்று விசாரித்துப் பார்த்தும் அதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மூன்று மாதங்கள் குழந்தையை வைத்தியசாலையில் வைத்து பராமரித்தார்கள். அதன் பின் அந்தக் குழந்தை பரிதாபமாக மரித்துவிட்டது.* இந்தக் குழந்தையைப் பெற்ற தாய் நிந்தையை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அதனால் தான் அதனை வீசிவிட்டு சென்றிருக்கிறாள். **பாவம் செய்து அதனால் வரும் நிந்தையையே ஏற்றுக் கொள்ள முடியவில்லை: ஆனால் பரிசுத்த வாட்டியாகிய மரியாள், கிருபை பெற்ற மரியாள் அந்த நிந்தையை ஏற்றுக் கொண்டாள்.**

ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவப் பட்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? இது விசேஷித்த சலாக்கியம். **யோவான் 1:12 அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்ட வர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைக ளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.** அப்படிப்பட்ட சலாக்கியம் பெற்ற நாம் சாதாரணமான நிந்தனை, அவமானம், அவச்சொல், பழிச்சொல் நிமித்தம் தேவன் எங்கள் மீது வைத்திருக்கிற தேவ சித்தத்தை, திட்டத்தை, இரட்சிப்பின் நோக்கத்தை உடைத்துவிடாமல் அதன் மீது கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். சாலக்கியத் திற்குள் ஒரு நிந்தனை. இந்த நிந்தனைகள் எல்லாம் சொற்ப நாட்களுக்குத் தான் என்று மரியாளுக்குத் தெரியும். **எங்களுடைய வாழ்வில் ஆண்டவருடைய திட்டம், சித்தம், நோக்கம் நிறைவேறுவதற்கு எங்களை அர்ப்பணிக்கிற போது ஆண்டவருடைய பார்வையில் நாம் சலாக்கியம், கிருபை பெற்றவர்கள்.** ஆண்டவருடைய பார்வையில் ஆசீர்வாதம் பெற்றவர்கள். அதனிமித்தமாய் உங்களுக்கு ஏற்படுகிற எல்லாவற்றையும் பொறுமையாக சகித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் பாவம் செய்யாவிட்டால் ஆண்டவரே இதை உமக்காய் தாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள். உண்மையாக அப்படி நீங்கள் இருந்தால் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். *தேவனே உம்முடைய நாமத்தின் மகிமைக்காய் இப்படி இருக்கிறேன், ஆண்டவரே அதனால் எனக்கு அவமானம், நிந்தனை, துன்பம்*

என்றாலும் நான் உமது அடிமை என்று சொல்லுங்கள். ஆண்டவர் உங்களுக்கு சலாக்கியத்தை தந்திருக்கிறார். அதற்குள் ஒரு நிந்தனையா? அதை தாங்கு வதற்கும் ஆண்டவர் தைரியத்தை தருவார்.

இயேசு சிலுவையில் தொங்குகிற போது, அங்கே மரியாள் நின்று கொண்டிருந்தாள். இயேசு எப்படி பிறந்தார் என்ற 100 வீதமான தெளிவு மரியாளுக்கு இருந்தது. அதனால் மரியாள் சிலுவையருகே தளம்பல் இல்லாமல் இருந்தாள். தன்னுடைய வயிற்றிலே பிறந்த உலக இரட்சகர் சிலுவையில் இப்படி மரிக்க வேண்டும் என்பதும் மரியாளுக்குத் தெரியும். அதனுடைய சிறப்பான வெளிப்பாட்டை பெற்றுக்கொண்டிருந்தாள். அதனால் நிந்தனை யையும் ஏற்றுக்கொண்டாள், மாத்திரமல்ல அதே குமாரன் மரிப்பதையும் ஏற்றுக் கொண்டாள். தேவனுடைய சித்தத்திற்காய், சலாக்கியம் பெற்றவள் தெளிவான பார்வையை பெற்றிருந்தாள். *உதாரணமாக: உலக கண்ணோட்டத்தில் பார்க்கிற போது எங்களுடைய பிள்ளையை யாராவது அடித்து துன்பப்படுத்து கிறபோது அதை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. அல்லது எங் களுக்கு துன்பம் ஏற்படுத்திய வர்களோடு ஏன் இதைச் செய்தீர் கள் என்று நீதி பேசுவோம்.* ஆனால் **மரியாளுக்குத் தெரியும்; நான் சலாக்கியம் பெற்றேன், அந்த சலாக்கியத்தின் நோக்கம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக, தேவனுடைய சித்தம் நிறைவேறுவதற்காக, ஆண்டவருடைய மீட்பின் திட்டம் நிறைவேறு வதற்காக.** எனவே அதற்காக நிந்தையை தாங்குகிறேன், பெற்ற சலாக்கியத்திற்குள் இழப்பையும் தாங்குகிறேன், அவமரியா தையை ஏற்றுக் கொள்கிறேன் என்று சிலுவையின் அருகே அமைதியாக நின்றாள்.

**நீங்களும் நானும் சலாக்கியம் பெற்ற வர்களா?** அப்படியென்றால் தேவன் அனுமதிப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவன் எங்களுக்கு கொடுத்த சலாக்கியங் களை அவருடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்த வேண்டும். தேவன் எங்களுக்கு ஈந்த ஈவுகள் அவருடைய சத்திய வார்த்தைக்கு சாட்சியாக நிற்பதற்குத் தான். தேவன் எங்களை உயர்த்தி வைத்திருக்கிறார் ஏன் தெரியுமா? அவருடைய வாக்குத்தத்தங்கள் எங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றி முடிப்பதற்காக. பவுல் ஒரு இடத்தில் சொல்கிறார்: அவரை கைது செய்த போது, நான் ரோமன். "இந்த சலாக்கியத்திற்குரியவனாகவே நான் பிறந்தேன்". அந்த சலாக்கியம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அதையெல்லாம் குப்பையும் தூசியுமாக பவுல் எண்ணினார். உங்களுக்கு தேவன் எப்படியான சலாக்கி யத்தை தந்திருக்கிறார்? நீங்கள் எப்படியான ஸ்தானத்தில் நிற்கிறீர்கள்? அதற்குள் நிந்தனை, துன்பம் வருகிறதா? வேதனை துன்பம் வருகிறதா? வரட்டும். தேவன் விசே ஷித்த அபிஷேகம் தந்திருக்கிறார்.

## 02. நிந்தனையில் ஒரு சலாக்கியம்

எல்லா மனிதர்களுடைய வாழ்விலும் ஒரு குறை இருக்கிறது. பாவம் செய்வதால் வருகிற குறைவைக் குறித்து நான் சொல்லவில்லை. மாறாக சாதாரணமாக பார்க்கிற போது ஏதோ ஒரு குறைவை ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறோம். *சிலர் தங்களுக்குள் யோசிப்பார்கள் நான் அறிவில் குறைந்தவன், அழகில் குறைந்தவன்,* இன்னும் *சிலர் யோசிப்பார்கள்: நான்*

ஆசீர்வதிக்கப்பட வேண்டியவிதமாய் ஆசீர்வதிக்கப்படாமல் இருக்கிறேன் என்று. சிலருடைய வாழ்வின் ஏக்கம் எப்போதுமே பெலவீனம். சிலருக்கு தங்களுடைய தேவை சந்திக்கப் படாமல் நீண்ட நாள் ஏக்கத்தோடு இருக்கும். இப்படி பல குறைவுகள் எங்களை நோகடிக்கும், யாரும் காணமுடியாத படி எங்களுடைய இருதயத்தை உடைக்கும். மற்றவர்களுடைய பார்வையில் எப்போதும் நிந்தனைக்குரியவனாக, நிந்தனைக்குரிய பெண்ணாக இருக்கிறேன் என்ற எண்ணம் இருக்கலாம். அல்லது எங்களுடைய குடும்பத்தின் தேவை சந்திக்கப்படவில்லையே, ஆண்டவரைத் தேடினோம், ஆனால் ஆண்டவர் எங்களைக் கைவிட்டுவிட்டார் என்ற விதத்திலும் வேதனை இருக்கலாம். நிந்தனையில், குறைவில், இழப்பில், அவமானத்தில் ஒரு சலாக்கியம் உண்டு.

**லூக்கா 19:1-4 (1.) அவர் எரிகோவில் பிரவேசித்து. அதின் வழியாக நடந்து போகையில், 2. ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், 3. இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், 4. அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.** சகேயுவைக் குறித்து வேதம் சொல்கிற அடையாளம் அவன் குள்ளமானவன். ஒரு சகோதரர் இருக்கிறார், அவர் தம்பியோ அண்ணனோ தெரியாது. ஏனென்றால் அவர் அவ்வளவு குள்ளமானவர். அவர் அடிக்கடி கடைக்கு வருவார். அங்கு பொருட்களை கொள்வனவு செய்ய வந்திருக்கும் அத்தனை பேருக்கும் பின்பதாக மறைந்து நிற்பார். சிலவேளை அதைப் பார்க்கிற போது எங்கள் உள்ளம் உடையும். அந்த குறைவு அந்த மனிதனுக்கு தன்னைக் குறித்த வேதனையான நிலைக்குள் வைத்திருந்தது. அவருடைய முகத்தைப் பார்க்கிற போதே வேதனையாக இருக்கும். என்னுடைய கணக்கின் படி அவருக்கு 40 வயது இருக்கும். அவருக்குள் ஒரு துன்பம் "நான் ஏன் இப்படி?" என்ற கேள்வி அவரை செயலாற்றவிடாமல் அவர் தானாகவே தன்னை மறைக்கிற வேதனையான சூழ்நிலையில் காணப்பட்டார்.

நான் நினைக்கிறேன், சகேயுவிற்கும் அப்படியான எண்ணம் இருந்திருக்க முடியும். அதனால் நின்றால் தெரியாது. இயேசு வருகிறார், அதற்கு முன்பே மரத்தின் மீது ஏறவேண்டும். ஏனென்றால் அப்போது தான் அவரைப் பார்க்க முடியும் என்ற எண்ணம் உருவாகியிருக்கும். வாழ்வில் யாருக்கு சொல்லியும் ஈடு செய்ய முடியாத நிந்தனையோடு வாழ்ந்து கொண்டிருக்கலாம். எந்த மனிதரிடமும் சொல்லி பதில் கிடைக்க முடியாத துன்பத்தோடு இருக்கலாம். தன்னுடைய வாழ்வின் வேதனையை புரிந்து கொள்ள முடியாத மக்கள் மத்தியில் எப்படி நிற்பேன் என்ற ஏக்கத்தோடு காட்டத்தி மரத்தின் மீது சகேயு ஏறினான். **உங்களுடைய வாழ்வின் பகுதிகளைப் புரிந்து கொள்ள முடியாத, உங்கள் இருதயத்தின் உடைவுகளைப் புரிந்து கொள்ள முடியாத மக்கள் மத்தியில் இன்னும் ஒடுங்கிப் போய் நிற்கிறீர்களா? ஒரு நிந்தனை, அவமானம் சூழ்ந்த வாழ்வு. நான் ஏன் இப்படி வந்தேன்? என்ற ஏக்கத்தோடு இருக்கிறீர்களா?** ஒருவர்

சொன்னார்: சகேயு இயேசுவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு மரத்தின் மேல் ஏறினான். ஆனால் இயேசு அவனைப் பார்த்தார்.

நிந்தனையோடு, அவமானத்தோடு எப்படி மக்கள் மத்தியில் கண்விழிப்பேன் என்ற ஏக்கத்தோடு ஏங்கிப் போய் நிற்கிறீர்களா? இயேசு உங்களைக் கண்டிப்பாய் பார்ப்பார். உங்களுடைய வாழ்வில் அந்த நிந்தனைக் குரிய குறைவு என்ன? வேதனைக்குரிய அம்சம் எது? எது உங்களுடைய வாழ்வைக் குடைந்து குடைந்து வேதனைப்படுத்துகிறது? எது மற்ற மக்களுடன் ஒன்றித்து நிற்கவிடாது உங்களை வேதனைப்படுத்துகிறது? ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்: **உங்களுடைய ஆண்டவர் உங்களைப் பார்க்கிறார்.** எத்தனையோ உயர்ந்தவர்கள் சேர்ந்து வந்தார்கள். அந்த உயர்ந்தவர்களுக்கு கிடைக்காத சலாக்கியம் இந்த தாழ்ந்தவனுக்கு கிடைத்தது. இயேசுவோடு வந்தவர்களின் வீட்டிற்கு இயேசு போகவில்லை. மாறாக இந்த குள்ள மனிதனுடைய வீட்டிற்குத்தான் சென்றார். அவனுடைய வாழ்வில் பெரிதான மாறுதல் ஏற்பட்டது. அவன் தன் பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்பினான். இயேசு சகேயுவைப் பார்த்து சொன்னார்: **"இன்றைக்கு உன் வீட்டில் நான் தங்க வேண்டும்."** நிந்தனைக்குரிய மனிதனுக்கு ஒரு சலாக்கியம் கிடைத்துவிட்டது. உலகத்தின் இரட்சகர், தேவாதி தேவன் எல்லோராலும் வெறுக்கப் பட்ட மனிதனுடைய வீட்டிற்குள் சென்றார்.

**நீங்கள் எந்த வழியில் அவமானத்தை, நிந்தையை சுமக்கிறீர்கள், ஒடுக்கப்படுகி றீர்கள், எந்த விதத்தில் கைவிடப்பட்டிருக் கிறீர்கள்? நீங்கள் ஒன்றை மட்டும் செய்யுங்கள். நீங்கள் பாவம் செய்திருந்தால் அதை அறிக்கை செய்யுங்கள்.** ஒடுக்கப்படு கிற யாவருக்கும் நன்மை செய்கிற தேவன் உங்களுடைய வாழ்வில் உங்களோடு கூட இருப்பார். நான் யோசித்தேன்: "ஆண்டவர் பெருமையுள்ளவர்களோடு அல்ல தாழ்மை யுள்ளவர்களோடு தான் தங்குவார்" என்று. **ஆண்டவர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ள வர்களுக்கோ கிருபையளிக்கிறார்.** நீங்கள் குள்ளம் உள்ளவர்களாய் இல்லாமல் இருக்கலாம் ஆனால் உங்கள் வாழ்வில் நொந்துபோய், தாழ்மையுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? எளிமையான ஆவியோடு இருக்கிறீர்களா? உடைந்த உள்ளத்தோடு இருக்கிறீர்களா? மனந்திரும்பியவர்களாய் இருக்கிறீர்களா? நிந்தனைகள் இருக்கட்டும், அவமானங்கள் இருக்கட்டும். இன்னும் எத்தனையோவிதமான நிந்தனைக்குரியவர் களாக இருக்கட்டும். அந்த நிந்தனைக்குள் ஒரு சலாக்கியம். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் உங்க ளோடு கூட இருக்கிறார்.

*இந்தியா தேசத்தில் ஒரு ஊழியக்காரர் இருந்தார். அவர் இலங்கை தேசத்திற்கும் வருகை தந்திருக்கிறார். அவரைக் குறித்த வீடியோவைப் பார்த்தேன். அவர் சொன்னார்: தான் 2½அடி உயரம் உடையவன் என்று. அவரை இன்னொரு ஊழியக்காரன் பேட்டி காண்கிறார். அவர் கேட்கிறார், நீங்கள் உங்களுடைய வாழ்வில் எப்படி இருக்கிறீர்கள்? என்று. அவர் சொன்னார்: ஒரு சந்தர்ப் பத்தில் அம்மா என்னை கடைக்கு அனுப்பினார். நான் கடைக்கு சென்ற போது என்னைவிட*

வயதில் குறைந்த சிறுவர்களுக்கு தன்னைக் கண்டால் ஒரே விளையாட்டு. அன்று அவரைப் பிடித்து இழுத்து விழுத்திவிட்டு தனக்கு மேலே ஏறி இருந்துவிட்டார்களாம். அதிலே ஒருவன் அவருடைய தலையின் மேல் அமர்ந்துவிட்டான். தான் எவ்வளவோ முயற்சி எடுத்தும் அவர்களிடம் இருந்து விடுபடமுடியவில்லை. ஒரு கட்டத்தில் அவர் மூச்சுவிடுவதற்கு கூட சிரமப்படுகிற கட்டத்திற்குள் வந்துவிட்டாராம். அந் நேரத்தில் அந்த வீதியால் சென்றவர்கள் அவர்களைக் கண்டு அந்த சிறுவர்களை துரத்திவிட்டு அவரைத் தூக்கிக் கொண்டு செல்கிற போது ஒரு ஆபத்தான சூழ்நிலையில் கொண்டு செல்லப் பட்டாராம். அவர் சொன்னார்: தான் அவ்வாறு சென்ற பிற்பாடு பத்து வருடங்கள் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தேன் எந்த இடத்திற்கும் செல்லவில்லை. தனக்குள் ஒரே கேள்வி, நான் ஏன் இப்படி பிறந்தேன், ஏன் எனக்கு இப்படிப்பட்ட அவமானம். அவர் சொன்னார்: தான் வீதியில் செல்கிற நாட்களில் நாய்கள் கூட அவரை விட்டுவைக்காதாம். ஒரு சிறுவன் வருகிறான் என்று அவரை ஓடி ஓடித்துரத்துமாம். அதற்கு பிற்பாடு யாரோ அவருக்கு ஆண்டவரைக் குறித்து சொல்லியிருக்கிறார்கள். அவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். இப்பொழுது அவர் சொல்கிறார்: தேவன் தன்னை இவ்வாறு வைத்திருப்பதற்காக ஸ்தோத்திரம் என்று. இதை நான் உயரத்தின் அடிப்படையில் வெளித்தோற்றத்தைக் கொண்டு சொல்கிறேன். ஆனால் இதை ஆவிக்குரிய அடிப்படையில் பார்க்க வேண்டும்.

**எத்தனையோவிதமான குறைவுகளோடு இருக்கிறோம். நாங்களும் சொல்ல வேண்டும்: தேவன் எம்மை இப்படியாக வைத்திருப்பதற்காக அவருக்கு ஸ்தோத்திரம், தேவன் இவ்வாறு எனக்கு அனுமதித்தற்காக அவருக்கு நன்றி என்று.** அவர் சிறப்பான ஒரு வாக்கியத்தை கூறினார்: நான் சரீரப்பிரகாரமாக குள்ளமானவன். இந்த சரீரப்பிரகாரமான குள்ள மனிதனை வைத்து ஆண்டவர் எத்தனையோ ஆவிக்குரிய குள்ளமானவர்களை இரட்சிக்கிறார் என்று. இங்கே நிந்தனைக்குள் ஒரு சலாக்கியம். நான் குறைவோடு இருக்கிறேன் என்று எத்தனை பேர் யோசிக்கிறீர்கள்? யாக்கோபு லாபான் வீட்டிற்கு சென்ற போது அங்கே வேலை செய்தான். லாபான் சம்பளம் கொடுத்த போது வேண்டாம் என்று சொல்லி, தனக்கு ராகேலைத் திருமணம் செய்து தரும்படி கேட்டான். அப்பொழுது லாபான் ஏழு வருடம் வேலை செய்யும்படி சொன்னான். ராகேலின் மேல் வைத்த நேசம் காரணமாக ஏழு வருடங்கள் யாக்கோபு லாபானிடத்தில் வேலை செய்தான். ராகேலைக் கொடுக்கிற அந் நாள் வந்த போது அவன் ராகேலை அவனுக்கு கொடுக்காமல் அவளுடைய மூத்த சகோதரி லேயாளை அவ் ஊர் வழக்கத்தின்படி கொடுத்தான். யாக்கோபு லாபானிடம் ஏன் இவ்வாறு செய்தீர் என்று கேட்ட போது மூத்தவள் இருக்க இளையவளை திருமணம் செய்வது இந்த தேசத்தின் வழமை இல்லை. எனவே நீ இன்னும் ஏழு வருடங்கள் வேலை செய் என்றான். அதன்படி யாக்கோபு பின்னும் வேலை செய்து ராகேலையும் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான்.

பிற்பாடு பார்த்தால் அங்கே லேயாளுக்கு குழந்தை பிறந்தது, ராகேலுக்கோ குழந்தை பிறக்கவில்லை. வேதத்தை நன்றாக வாசித்துப் பார்த்தால் புரியும்; யாக்கோபு ராகேலை நன்றாக நேசித்தான். இப்படி நேசிக்கப்படுவதே ஒரு சாலக்கியம். ஆனால் அந்த சலாக்கியத் திற்குள் ஒரு நிந்தனை இருந்தது. **சலாக்கி யத்திற்குள் நிந்தனை; நிந்தனைக்குள் சலாக்கியம்.** இவைகள் எதுவும் உங்கள் வாழ்க்கையில் உங்கள் ஆத்தும நேசரைவிட்டு பிரிவதற்கு ஏதுவாக இருக்கக்கூடாது. **குறைவுகள் இருக்கும் அது இருந்துவிட்டுப் போய்விடும். இல்லாமை இருக்கும் ஆனால் திடீரென நிறைவு வரும்.** ஆகவே உங்களைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். இது வரைக்கும் நிந்தனையோடு இருக்கிறீர்களா? அதற்குள் ஒரு சாலாக்கியம், தேவனுடைய நேசம் உங்களுக்காக உண்டு. இயேசுவினு டைய அன்பு உங்களுக்கு உண்டு.

*அவுஸ்திரேலியா தேசத்தை சேர்ந்த ஒரு மிஷனெரிக்கு இரண்டு கரங்களும் இரண்டு கால் களும் இல்லை. அவர் உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று ஆண்டவருடைய வார்த்தையை சொல்கிறார். அவரைக் காண் பதற்காகவே ஜனங்கள் கூடிவரு வார்கள். அவர்களுக்கு அவர் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிப்பார். அவர் சொல்கிறார்: இவைகள் இல்லை என்பது எனக்கு இப்போது தெரிவதில்லை. ஏனென்றால் தேவனுடைய இரட்சிப்பும், தேவனுடைய அன்பும் அவருக்கு இருந்தது. மற்றவர்களு டைய பார்வையில் அவர் குறைவோடு தான் இருக்கிறார். ஆனால் அவருக்குத் தெரியும், இந்த குறைபாட்டிற்குள்ளும் தனக்கு ஒரு நிறைவு உண்டு என்பது. அவர் மிகவும் உற்சாக மாக இருக்கிறார். இரட்சிப்பின் சந்தோஷத்தை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார். அவருடைய வாழ்வு முழுவதும் தேவனுடைய நாமத்தின் மகிமைக் காக பயன்படுகிறது.* உங்களுடைய வாழ்வில் நிந்தனை, அவமானம் நிறைந்த சூழல் உண்டா? நீங்கள் தப்பு, பாவம் செய்யா மல் உங்களுடைய வாழ்வு நிந்தனைக்குள் சென்றுவிட்டதா? ஆனாலும் அதற்குள்ளும் தேவன் உங்களுக்கு ஒரு சலாக்கியத்தை வைத்திருக்கிறார். எது உங்களுடைய வாழ்வில் குறைவு என்று எண்ணுகிறீர்கள்? அதற்குள்ளே சிறப்பான ஆசீர்வாதத்தை தேவன் வைத்திருக்கிறார், அதற்குள் தேவனுடைய நாமத்திற்குரிய மகிமைக்குரிய பொக்கிஷத்தை தேவன் வைத்திருக்கிறார்.

## 03. வல்லமை, அதிகாரத்துக்குள் தேவனுடைய சித்தம், தேவனுடைய மகிமை.

அதற்கு நேரடியாக இயேசு கிறிஸ்து வைக் கூறுகிறேன். இயேசு பூரண அதிகார மும் பூரண வல்லமையுள்ளவர். அவர் மக்களை மீட்பதற்காகவே குழந்தையாக இப் பூமியில் பிறந்தார். ஜனங்களை மீட்பது பிதாவினுடைய சித்தம். எனவே வல்லமை யுள்ளவர் பூமியிலே மனிதனாக வாழ்ந்தார். அவர் பூமியிலே வாழ்கிற போது கண்டிக்க வேண்டிய எத்தனையோ மனிதர்களை கண்டித்தார், குணமாக்க வேண்டிய எத்தனையோ மனிதர்களை குணமாக்கினார். தன்னுடைய வல்லமையினால் யோவான் 6, 7ஆம் அதிகாரங்களில் தேவனுடைய

வார்த்தையை, தான் ஏன் வந்தேன் என்று தெளிவாக சொல்கிறார். அவருடைய வல்லமைக்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. **மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களுக்கு பின் லாசருவை உயிரோடு எழுப்பினார்.** ஆனால் இவையெல்லாவற்றிற்குள்ளும் தேவனுடைய சித்தமும் தேவனுடைய மகிமையும் இருந்தது.

இறுதியிலே பிலாத்துவுக்கு முன்பாக வந்து நின்ற போது பிலாத்து சில கேள்விகளைக் கேட்கிற போது பதில் சொல்லிவிட்டு பிற்பாடு அமைதியாக இருக்கிறார். அப்போது பிலாத்து கேட்கிறான்; நீர் எனக்கு பதில் சொல்லவில்லையா? எனக்கு உன்னை விடுவிக்கவும் அதிகாரம் உண்டு, சிலுவையில் அறையவும் அதிகாரம் உண்டு என்று சொல்கிறான். அதற்கு இயேசு; **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது"** என்றார். நான் இதனைத் தியானிக்கிற போது ஒன்றை யோசித்துப் பார்த்தேன்: இயேசு தன்னுடைய முழு அதிகாரத்தையும் தேவனுடைய சித்தத்திற்காகவும், மகிமைக்காகவும் பயன்படுத்தினார். பிலாத்துவிற்கு அவர் பிரதியுத்தரமாக கதைக்காமல் நினைத்திருந்தாலே எதுவும் நடந்திருக்கும். அவ்வளவு வல்லமை நிறைந்தவர் இயேசு. அவர் சொன்னால் அது நடக்கும். **ஆனால் அவர் தன்னுடைய அதிகாரத்தை, வல்லமையை துஷ்பிரயோகம் செய்யவில்லை. தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும் தான் வந்த நோக்கத்திற்காகவும் தேவசித்தம் நிறைவேற வேண்டும் என்பதற்காகவும் மக்களின் மீட்பிற்காகவும் அதைப் பயன்படுத்தினார்.**

வாழ்க்கையில் எத்தனையோ விதமான வல்லமையுள்ளவர்களாக இருக்கிறோம். *ஒரு தாயார் மரித்துவிட்டார். சில வருடங்களுக்கு முன்பாக அவர் வியாதிப்பட்டிருக்கும் போது, தன்னுடைய வியாதியின் வேதனையோடு ஒரு இடத்தில் இருந்தாராம். அந்த இடத்தில் இருந்து கொண்டு தன்னுடைய வேதனைக்கு, வியாதிக்கு உதவி செய்யக்கூடிய அதிகாரம் பெற்ற ஒருவர் அந்த இடத்தால் நடந்து சென்ற போது அம்மா, அம்மா என்று அவரை அழைத்தாராம். அப்போது நான் கேட்டேன்: நீங்கள் கூப்பிட்டது அவருக்கு கேட்டிருக்குமா? என்று. அதற்கு அந்த அம்மா சொன்னார்: நன்றாகத் தெரியும், அவர் நன்றாக என்னை திரும்பி பார்த்துவிட்டும் உதவி செய்யாமல் சென்றுவிட்டார் என்று சொல்லி அழுதார்.* தேவன் உங்களுடைய வாழ்வில் தருகிற அதிகாரம், வல்லமை, சலாக்கியம் அல்லது ஆசீர்வாதம் இவையெல்லாவற்றையும் மற்றவர்களுடைய கண்ணீர் துடைக்க பயன்படும்படியாக பயன்படுத்த வேண்டும். எங்களுடைய பொறுப்பு கூட இன்னொருவருடைய அழிவுக்கல்ல, நிந்தனைக்கல்ல, வேதனைக்கல்ல. மக்களுடைய ஆசீர்வாதத்திற்காக பயன்படவேண்டும்.

தன்னுடைய வல்லமை அதிகாரத்தை இந்த இடத்தில் பயன்படுத்தினால் ஜனங்களுக்கு மீட்பு இல்லை என்று இயேசுவுக்குத் தெரியும். இயேசுவை பிடிக்கச் சென்ற போது பேதுரு அங்கே வந்த போர்ச்சேவகரில் ஒருவனுடைய காதை வெட்டுகிறான். அப்போது இயேசு சொல்கிறார்: நான் வேண்டிக் கொண்டால் 12 லேகியோனுக்கு

அதிகமான தேவதூதர்கள் வந்து எனக்காக யுத்தம் பண்ணுவார்கள் என்று. தேவனுக்காய் எங்கள் வல்லமைகளை பயன்படுத்த வேண்டும். தேவனுக்காக அவைகளை வைத்துக் கொண்டு பொறுமையாக இருக்க வும் வேண்டும். ஏனென்றால் எங்களுடைய நோக்கமெல்லாம் தேவனுடைய சித்தம்! மகிமை!.

நீங்கள் சலாக்கியம் பெற்றவர்களாக இருந்தால் அதற்குள் வருகிற நிந்தையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நிந்தனையுள்ளவர்களாக இருந்தால் அதற்குள் இருக்கிற சலாக்கி யத்தை கண்டுகொள்ளுங்கள்.

நீங்கள் உயர்ந்த ஸ்தானத்திலே தேவனுடைய பிள்ளைகள் என்ற அதிகாரம் பெற்றிருந்தால் அதனை மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காய், விடுதலைக்காய், நன்மைக்காய், தேவனுடைய சித்தத்திற் காகவும், அவருடைய மகிமைக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**



---

**இடமிருந்து வலமாக**

01. தாவீது (சங்கீதம் 31:9)
04. மோசே (எண்ணா 11:15)
06. யோயாக்கீம் (எரேமியா 36:22)
10. ஆபேல் (1இரா 15:20)
12. ஆபிரகாம் (யாக்கோபு 2:23)

**வலமிருந்து இடமாக**

02. சிம்சோன் (நியாயா 16:21)
05. எரேமியா (புலம்பல் 2:13)
08. மனாசே (11இரா 21:16)
09. சாலமொன் (பிரசங்கி 7:15)
11. யோபு (யோபு 30:29)
14. அதோனிபேசேக் (நியா 1:6)


**மேலிருந்து கீழாக**

01. தாவீது (11சாமுவேல் 3:31)
03. யோசேபியாத் (11நாளா 22:11)
05. எலியாம் (குழம்பியுள்ளது) 11சாமு 11:3
07. லாமேக்கு (ஆதியாகமம் 5:31)

**கீழிருந்து மேலாக**

12. ஆபேலின் (எபிரெயர் 11:4)
13. நெகேமியா (நெகேமியா 2:13)
14. அகினோவாம் (1சாமு 25:43)
15. யோராம் (11நாளா 21:19)

# குறுக்கெழுத்துப் போட்டி - 86






ஜசிந்தா அக்கா




மாலாவிற்கு ஞாயிறு பாடசாலைக்குச் செல்வதென்றால் மிகவும் பிரியம். ஆகவே தவறாமல் சென்று வருவாள். அவள் குடும்பம் மிகவும் ஏழ்மையானதாக இருந்தாலும் தாழ்மையாகவும், பண்பாகவும் நடந்து கொள்வாள். இவளது நல்ல குணாதிசயம் மற்றவர்களின் பாராட்டைப் பெறச் செய்தது.

மாலாவின் ஞாயிறு பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் பிள்ளைகள் விழாவிற்காக பிள்ளைகள் ஆயத்தமாகியிருந்தனர். நடிக்கவும், பாடவும் இன்னும் பல காரியங்கள் செய்வதற்காகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே பிள்ளைகள் விழா இனிதே முடிவடைந்தது. பிள்ளைகளும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

முடிவிலே எல்லோருக்கும் சிற்றுண்டி வகைகள் பரிமாறப்பட்டது. பங்குபற்றிய பிள்ளைகளுக்கும் ஒரு மேசையில் சிற்றுண்டி வகைகளும், பண்ணும் வைக்கப்பட்டிருந்தது. ஆசிரியர் அவர்களை அழைத்து எடுத்துச் சாப்பிடுங்கள் என்று கூறினார். எல்லாரும் முண்டியடித்துத் தங்களுக்குப் பிடித்தமானதை எடுத்தார்கள். ஆனால் மாலாவோ தனது நேரத்திற்காகக் காத்திருந்தாள். சிற்றுண்டி வகைகள் முடிவடைந்து கொண்டிருந்தன.

அவள் மற்றவர்களை இடித்துத் தள்ளாமல் பொறுமையாய் நின்று கொண்டிருந்தாள். எல்லாரும் எடுத்த பின்பு எஞ்சியிருந்த ஒரு சிறிய பண்ணையும், சில சிற்றுண்டிகளையும் எடுத்துக் கொண்டு பிள்ளைகளோடு இருந்து சாப்பிடும்படியாய் சென்றாள். எல்லாப் பிள்ளைகளும் ருசித்து, ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். தானும் சேர்ந்து சந்தோஷமாய் பண்ணை ருசி பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த சந்தோஷ வேளையில் ஆசிரியரின் குரல் ஒலித்தது: *"சாப்பிட்டு முடிந்ததும் எல்லாரும் பிரதான மண்டபத்திற்குள் வாருங்கள்"* உடனே பிள்ளைகள் எல்லோரும் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிய வண்ணம் மண்டபத்திற்குள் ஓடி இடம்பிடித்தார்கள். அந் நேரத்திலும் மாலா பொறுமையைக் கடைப்பிடித்தாள். மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் கடைசியாக மண்டபத்திற்குள் சென்று அமைதியாக அமர்ந்து கொண்டாள். மாலாவைக் குறித்து கவனிக்கப்பட்டவைகள் எல்லாம் ஆசிரியர் தனது மனதில் பதித்துக் கொண்டார்.


ஒன்றாய் கூடிய பிள்ளைகளுக்கு ஆசிரியர் நன்றி கூறினார். இன்றைய இந்த விழாவில் யார் சிறந்த மாணவர் என்று நாம் அவதானித்தோம். **அதற்கு ஒரே ஒரு மாணவி மாலா தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாள் என்று சொல்லி அவளை முன்னே அழைத்து வாழ்த்தி ஒரு பரிசைக் கொடுத்தார். மாலாவின் முகம் மலர்ந்தது. மிகுந்த சந்தோஷத்தோடு பரிசைத் திறந்து பார்த்து அதிர்ச்சியடைந்தாள்.** ஆ!....! வைரக்கல் பதிந்த தங்க மோதிரம். அதிசயப் பரிசு.

பிரியமான தேவ பிள்ளைகளே, எப்படி ஆசிரியர் மாலாவைக் கவனித்துக் கொண்டிருந்தாரோ அப்படியே இயேசு சுவாமியும் உங்கள் ஒவ்வொருவரையும் கவனித்த வண்ணமாகவே இருக்கிறார். நீங்களும் இயேசப்பாவின் வார்த்தையின்படி உண்மையாய் நடந்து அவர் முந்நிலையில் போய் நிற்கும் போது வைரக்கல் மோதிரம் அல்ல வைரக்கல் பதிந்த தங்கக் கிரீடத்தை உங்கள் தலையின் மேல் வைத்துவிடுவார். அந் நேரம் எத்தனை மகிழ்ச்சி! சின்னத்தம்பி, தங்கையரே உண்மையாய் நடக்க ஆயத்தமா?

**நீ மரண பரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் - வெளிப்படுத்தல் 2:10**

## வினாவிடை – 88
### சரியான பதில்கள்

01. சொஸ்தேனே - அப்போஸ்தலர் 18:17
02. ஊசா - 1நாளாகமம் 13:10, 11சாமு 6:7
03. தீமோத்தேயு - அப்போஸ்தலர் 16:1-2
04. யோசேப்புக்கு அவன் சகோதரர் - ஆதி 43:25-26
05. மாயமுள்ள இருதயத்தார் - யோபு 36:13
06. தேமேத்திரியு - 111யோவான் 12
07. எட்டுப்பேர்
08. பிறவிக்குருடன் - யோவான் 9:1-35
09. இயேசு - லூக்கா 10:18
10. சவுல் - 1சாமு 15:13,26



# எழுப்புதலுக்கான இதயக்கதறல்

# Heart Cry for Revival



☐ போதகர் வேதநாயகம் சுமணன்

## வாலிபர் வளாகம்



## ஜான் வெஸ்லி
## The life & Ministry of John Wesley



ஆயினும் சாமுவேல், "எப்வொர்த்" திருச்சபையின் அன்புள்ள போதகராய் விளங்க வில்லை. உண்மையில் அவருடைய திருச்சபை யின் மக்கள் அவரை அதிகமாக வெறுத்து வந்தனர். சில சமயங்களில் அவருடைய திருச்சபை யைச் சேர்ந்த மக்கள் அவர் மேலிருந்த தங்கள் வெறுப்பை வெளிப்படை யாகவே தெரிவித்தனர் என்று வி.எச்.எச்.கிரீன் என்பவர் கூறுகிறார். அவர் புத்தகங்களையும் கவிதைகளை யும் எழுதிய போதிலும் அவைகள் ஒரு போதும் பிரபலமடைய வில்லை. சாமுவேலும் சூசன்னாவும் தங்களுடைய நாட்டின் அரச குடும்பத்திற்கு மிக்க விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தனர். மன்னர் மூன்றாம் வில்லியத்திற்காக சாமுவேல் ஜெபிப்பார். அதே சமயம் சூசன்னா இரண்டாம் ஜேம்ஸ் மன்னருக்காக ஜெபிப்பார். இவ்விதமான கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை மிகவும் அன்புள்ளதாகவே காணப்பட்டது.

இக் குடும்பத்தில் சாமுவேலைவிட சூசன்னாவின் செல்வாக்கே அதிகமாக காணப்பட்டது. 1688ஆம் ஆண்டில் இவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சூசன்னாவின் தந்தையார் பியூரிட்டன் திருச்சபையைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஆன்ஸ்லே ஆவார்.

அவர்களுடைய பிள்ளைகள் பிற திருச்சபையினருடன் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்ற பியூரிட்டன் திருச்சபையின் உபதேசத்தைப் பெற்றோர் பின்பற்றின போதிலும், தனது பதின்மூன்றாவது வயது முதல் சூசன்னா ஆங்கிலிக்கன் திருச்சபைக்குச் செல்லத் தொடங்கினார். இதை அவர் ஒரு போதும் மாற்றிக்கொள்ளவில்லை. அதே சமயம் அவர் தனது தொடக்க காலக் கொள்கைகளையும் மாற்றிக் கொள்ளவில்லை என்று ரூபர்ட் டேவிஸ் கூறியுள்ளார். அபிப்பிராய பேதங்கள் எப்போதும் இருந்த போதிலும் அவர் தனது பியூரிட்டன் முறைகளான தியானம், ஒழுக்கம், கல்வி ஆகியவற்றில் முற்றிலுமாக ஈடுபட்டு வந்தார். **ஜாண் வெஸ்லி இவ்விதமான பியூரிட்டன் முறைகளைத் தனது தாயாரிடமிருந்து பழகிக் கொண்டார் என்று ஜாண் நியூர்டன் கூறியுள்ளார்.**

இவ்விதமான குடும்பப் பின்னணியானது ஜாண் வெஸ்லியை உருவாக்குவதாக அமைந்தது. எனவே அவர் தன் இறுதிக் காலம் வரையில் இங்கிலாந்து திருச்சபைக்கு விசுவாசம் உள்ளவராக விளங்கினார். அவர் ஆராதனை ஒழுங்குகளையும், ஜெப புத்தகத்தையும் நேசித்தார். **மேலும் அவர் சுதந்திரமான மனப்போக்குள்ளவராகவும் பல கருத்துக்களை படித்து அறியும் விருப்பமுள்ளவராகவும் விளங்கினார். தான் செய்ய விரும்பும் எல்லாவற்றைப் பற்றியும் தகவல்களைச் சேகரிக்கும் பழக்கம் அவரிடமிருந்தது.** 1770ஆம் ஆண்டின் அமெரிக்க புரட்சிக்கு முன்பாக, இங்கிலாந்தில் உள்ள ஆளும் கட்சியை ஆதரிக்கக்கூடாது என்னும் அரசியல் கருத்துடையவராகவும் திகழ்ந்தார். தன் பிள்ளைகளின் நடத்தையை மிகவும் உன்னிப்பாகக் கவனிப்பவராக சூசன்னா விளங்கினார். ஜாண் வெஸ்லியும் அவரது சகோதரிகளும் தங்களுடைய தாயாருக்கு மிகவும் அடங்கி நடந்தனர்.

## தீயிலிருந்து மீட்கப்படுதல்

1709ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் தேதியன்று சாமுவேல், சூசன்னா வெஸ்லி தம்பதியரின் வீடு எரிந்து போனது. அப்போது ஜாண் வெஸ்லிக்கு ஆறு வயது முடியவில்லை. ஆனால் இச் சம்பவம் அவருடைய வாழ் நாள் முழுவதும் மறக்க முடியாததாய் அமைந்துவிட்டது. ஆவிக்குரிய விளக்கத்துடன் இச் சம்பவத்தை அவருடைய தாயார் அடிக்கடி கூறுவார். இச் சம்பவமானது ஜாண் வெஸ்லி தேவனுடைய ஊழியத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்பதை உறுதி செய்வதாய் அமைந்தது.

எப்வொர்த்திலுள்ள ஆலயம் பற்றி எரிந்து கொண்டிருந்த அந்த மாலை வேளையில், வெஸ்லியின் குடும்பத்தினர் தப்பி வெளியேறிய போதிலும், அவர்களுடைய எட்டு பிள்ளைகளில் ஒன்று அங்கு காணப்படவில்லை. பயத்தோடு அவர்கள் திரும்பி பார்த்த போது, **மேல்மாடியின் ஜன்னலின் வழியாக ஜாண் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்தார்கள். தீ வேகமாக பரவிற்று. கிராமத்தவர் ஒருவர் ஜன்னலருகே ஓடிச்சென்று, மற்றொரு மனிதரைத் தன் தோளின் மேல் ஏற்றி, தக்க நேரத்தில் பிள்ளையைக் காப்பாற்றினார். ஒரு சில விநாடிகளில் கூரை முழுவதுமே எரிந்து விழுந்துவிட்டது.**

இதைக் கண்ட சாமுவேல் அவர்கள் தன் அருகிலிருந்த மக்களைத் தன்னோடு வரும்படி அழைத்து, அனைவருமாக சேர்ந்து ஜெபித்து தன் எட்டுப் பிள்ளைகளையும் காப்பாற்றின தேவனுக்கு நன்றி செலுத்தினார். வீடு போனாலும் கூட பரவாயில்லை, என் பிள்ளைகளே என் செல்வம் என்று அவர் கூறினார்.

தேவனுடைய கரம் வெஸ்லியின் மேல் உள்ளதென்பதற்கு இச் சம்பவம் ஒரு சான்றாக அமைந்தது. இதைக் குறித்து வெஸ்லி குறிப்பிடும்போதெல்லாம் **சகரியா 3:2இல் உள்ளபடி "நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளி அல்லவா?" என்று குறிப்பிடுவார்.** தேவனுடைய இந்தப் பாதுகாப்பை நினைத்து, தன் வாழ்நாளில் ஒவ்வொரு ஆண்டிலும் இத் தினத்தை அவர் கொண்டாடி வந்தார். தன் மனமாற்றத்திற்கு முன்புவரையில், அவர் இச் சம்பவத்தைத் தன் வாழ்நாளின் மிகப்பெரிய நிகழ்ச்சியாக கருதினார். பல ஆண்டுகளுக்கு பிறகு அவர் ஓவியம் வரைந்த போது அந்த ஓவியத்தின் பின்னணியாக எரிந்து கொண்டிருக்கிற ஒரு வீட்டினை வரைந்து அதற்குக் கீழாக **"இது நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளி அல்லவா?"** என்ற வாசகத்தை எழுதினார்.

1714ஆம் ஆண்டில் தனது பதினோராம் வயதில், லண்டனில் "சார்ட்டர் ஹவுஸ்" என்னும் மாணவர் இல்லத்திற்கு ஜாண் வெஸ்லி சென்றார். இவ்விடத்திலும் வீட்டிலிருந்து வந்த கடிதங்களின் வாயிலாகக் கடினமான ஒழுங்குமுறைகளும் எளிமையான வாழ்க்கை முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டன. காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்து, 8மணிக்கு காலை சிற்றுண்டி அருந்திவிட்டு, பின்பு பகல் முழுவதும் கடுமையாகப் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். இளமையில் விதிக்கப்பட்ட இவ்விதமான கடினமான சூழ்நிலைகள் பிற்காலத்தில் அவர் செய்த சுயகட்டுப்பாடுகளுள்ள சுவிசேஷ ஊழியத்திற்கு பேருதவியாய் இருந்தது.

தன்னுடைய இறையியல் வாழ்வில் மற்றவர்களின் குறுக்கீடுகள் இல்லாமலிருந்த தென்று வெஸ்லி தன் நாட்குறிப்பில் எழுதியுள்ளார். இதன் காரணமாக அவர் கவலையற்ற வராகவும், இருதயத்தில் துணிகரமுள்ளவராகவும் மாறினார் என்று அவர் தன் சாட்சியில் கூறியுள்ளார்.

**1. மற்றவர்களைக் காட்டிலும் நல்லவராக இருப்பது 2. இறையியலில் பற்றுதலுடன் வாழ்வது 3. வேதத்தை வாசிப்பது 4. திருச்சபைக்கு போவது 5. ஜெபம் செய்வது**

ஆகிய செயல்கள் தன்னை இரட்சிக்கும் என்ற அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். இவ்விதமாகத் தான் வெஸ்லியின் பெற்றோர் அவருக்குச் சுவிசேஷத்தைக் கற்பித்தார்களா? என்று மக்கள் கேட்கும் விதத்தில் அவர் செயற்பட்டார். ஆயினும் உண்மையான சுவிசேஷத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை.

## ஆக்ஸ்போர்டு மற்றும் கிரைஸ்ட் சர்ச்

1720ஆம் ஆண்டில் ஜாண் வெஸ்லி பட்டப்படிப்பிற்காக ஆக்ஸ்போர்டுக்கு வந்தார்; அப்போது ஜார்ஜ் விகன், ஹென்றி ஷெர்மேன் ஆகிய இரண்டு ஆசிரியர்களிடம் கல்வி பயின்றார். அதின் மூலம் இளங்கலை பட்டப்படிப்பினை நிறைவு செய்தார். மற்ற இளைஞர்களைப் போன்றே உணவகம் செல்லுதல், விளையாட்டுக்களில் பங்கேற்றல் போன்ற ஆக்ஸ்போர்டின் சமூக வாழ்க்கையை அவரும் அனுபவித்தார். ஆனாலும் அவரிடம் குறைவான பணமே இருந்தது. கடன் பிரச்சினைகளில் இருந்த அவருடைய தந்தையாரால் இவருக்குப் போதுமான பணத்தை அனுப்ப முடியவில்லை; உதவித் தொகையைக் கொண்டு சிக்கனமாக வாழவேண்டிய நிலையிருந்தது.

பல்கலைக் கழகத்தில் தீவிரமான கட்டுப்பாடுகள் இல்லாத போதிலும் அவருடைய பள்ளி நாட்களில் தீவிரமாக படித்ததின் காரணமாக கல்லூரிப்படிப்பு அவருக்கு எளிதாகவே தோன்றியது. அக் காலத்தில் ஆகஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறுவது எளிதாக இருந்தது என்று ஒரு சரித்திர ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவர் இலக்கியத்தைப் போன்றே தர்க்கவியலில் (Logic) அதிக நாட்டம் செலுத்தினார். அதிக நேரத்தை செலவிட்டு, பல புத்தகங்களை ஆர்வத்துடன் படித்த போதிலும் தனது ஆசிரியர்களால் சொல்லப்பட்ட கல்வித் திட்டத்திற்கான பாடங்களையும் திருப்திகரமாக படித்துத் தேறினார். இதன் மூலமாக அவர் அறிவு விருத்திக்கு வழி ஏற்பட்டது. "சேகரித்தல்" என்னும் விதத்தில் அவர் பல புத்தகங்களை படிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு புதிய புத்தகமாக அவர் படித்துக் கொண்டேயிருந்தார். நாட்டின் கலாச்சாரத்தின்படியே தனது இருபதாம் வயதில் வெஸ்லி, நகைச்சுவை உணர்வும், இலக்கியத்தில் நாட்டமுமுள்ள இளைஞராக விளங்கினார். அவருக்கு முன்பாக ஆக்ஸ்போட்டில் படித்த அவருடைய மூத்த சகோதரரான சாமுவேல் திருமணம் செய்து கொண்டு குடும்பத்துடன் வாழ்ந்த போதிலும் தன் இளைய சகோதரன் ஆக்ஸ்போர்டுக்கு வந்த ஆரம்ப நாட்களில் பலவிதங்களில் உதவி செய்து வந்தார்.

**தொடக்கத்திலிருந்தே ஆக்ஸ்போர்டின் இறையியல் வாழ்வில் வெஸ்லி ஆர்வம் காட்டி வந்தார். அவரைச் சந்தித்தவர்களில் பலரிடம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமானது இறையியல் தன்மையின்றி இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.** வெளிப்படையான பரிசுத்த வாழ்வினை அவர் மேற்கொண்டதுடன் தனிமையிலும் மக்கள் மத்தியிலும் தன் ஜெபங்களை கிரமமாகக் கூறிவந்தார். வேதத்தையும், புதிய ஏற்பாட்டைப் பற்றிய விளக்கவுரைகளையும் படித்திருந்தார். ஆயினும் பிற்காலத்தில் அவர் தன்னைப் பற்றிக் கூறும் போது ஆக்ஸ்போர்டில் மாணவராக இருந்த போது வழக்கமாகப் பாவம் செய்து வந்ததாகவும், எனவே தான் பெற்ற சத்தியத்தின் வெளிச்சத்தில் மனந்திரும்பி வாழும்படி பல பக்தர்கள் தன்னிடம் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1724ஆம் ஆண்டில் கிறிஸ்மஸ் விழா முடிந்தவுடன், தான் ஊழியம் செய்ய விரும்புவதாக வெஸ்லி தன் பெற்றோருக்கு கடிதமெழுதினார். முதலில், அவருடைய தந்தையார் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் எப்போதும் ஜானுக்கு உற்சாகமளிக்கும் அவரது தாயார் அதை உறுதியாக ஆதரித்தார். 1725ஆம் ஆண்டின் புனித வாரத்தின் போது அவர் இதற்காகத் தீவிரமாக ஆயத்தம் செய்தார். சரியான நேரத்தில் தாயார் சூசன்னா எழுதிய கடிதமும் வந்தது. **"இப்போது உன்னைத் தீவிரமான சுயபரிசோதனைக்கு உட்படுத்திக்கொள். நீ மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படுவதற்கான விசுவாசத்துடன் இருக்கிறாயா? என்று அறிந்து கொள்"** என்று அதில் அவர் எழுதியிருந்தார்.

## லிங்கனில் மாணவராகச் சேருதல்

1724ஆம் ஆண்டில் தனது பி.ஏ பட்டப்படிப்பை முடித்த பிறகும் வெஸ்லி ஆக்ஸ்போர்டு நகரிலேயே தங்கியிருந்தார். அங்குள்ள வேறொரு கல்லூரியில் மேல் படிப்பிற்காக முயற்சி செய்தார். 1726ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் தேதியன்று அவருக்கு லிங்கன் கல்லூரியில் சேருவதற்கு அனுமதி கிடைத்தது. (அவ்விதம் தேர்வு செய்யப்பட்ட பன்னிரண்டு பேரில் அவரும்

ஒருவர்) இந்த நியமனமத்தை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு தனது எம்.ஏ பட்டப்படிப்பைத் தொடர்ந்ததுடன் தனது ஊழியத்திற்காகவும் ஆயத்தம் செய்யத்தொடங்கினார். ஆக்ஸ்போர்டு நகரத்தின் பேராயர் (பிஷப்) அவரை 1725ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் தேதியன்று ஆக்ஸ்போர்டில் உள்ள தலைமை திருச்சபையின் துணை ஊழியராக நியமித்தார் (Deacon). அதுவே அவர்கள் கல்லூரியின் ஆலயமாகவும் திகழ்ந்தது. 1728ஆம் ஆண்டில் அந்த ஆலயத்தின் போதகராக ஜாண் வெஸ்லி நியமிக்கப்பட்டார். அவருடைய இளைய சகோதரரான சார்லஸ் வெஸ்லி இவரைக் காட்டிலும் நான்கரை ஆண்டுகள் இளையவராவார். அவரும் 1726ஆம் ஆண்டில் எப்வொர்த் நகரைவிட்டு, படிப்பதற்காக ஆக்ஸ்போர்டில் சேர்ந்தார். **"உண்மையான தீர்மானத்துடன் இறைவனின் பணியை உன் வாழ்வின் தொழிலாக ஏற்றுக்கொள்"** என்று இந்த ஆண்டுகளில் வெஸ்லியின் தாயார் அவருக்கு கடிதமெழுதினார்.

லிங்கனில் புதிய மாணவராக இணைந்த ஜாண் வெஸ்லி 1726ஆம் ஆண்டு கோடை காலத்தில் எப்வொர்த்திற்கு சென்று, அங்கு தன் தந்தையின் ஊழியத்தில் உதவி செய்தார். ராட் என்னுமிடத்தில் உள்ள மக்கள் மத்தியில் தொடங்கப்பட்ட ஊழியத்தில் உதவும்படி ஜாண் அங்கு சென்றார். **ஆனால் அப்போது ஹெட்டி என்னும் அவருடைய இளைய சகோதரி குடும்பத்தில் குழப்பமான சூழ்நிலையில் இருந்தார். அவருடைய தகப்பனார் அவளிடம் கோபமாக நடந்து கொண்டார் என்று ஜாண் கருதினார். அவர் ஹெட்டியை கைவிடும் விதத்தில் நடந்து கொண்டதுடன், அவளைப் பற்றி ஜாண் வெஸ்லியிடம் அவர் பேசும்போதெல்லாம் வெறுப்பையே வெளிப்படுத்தி வந்தாரென்று ஜாண் குறிப்பிடுகிறார். இவ்விதமான பிரச்சினைகளில் எப்போதும் தலையிட்டு, தீர்வு காண்பவராக ஜாண் காணப்பட்டதினால், ஹெட்டியை சந்திப்பதென்ற அவர் முடிவு செய்தார்.**

தொடரும்....

## சரியான விடை எழுதியவர்கள்
குறுக்கெழுத்துப் போட்டி - 86,
வினா விடை - 88

**காரைநகர்**
01. ம.டயானி
02. ம.மதுசன்
03. லோ.வதனி
04. பா.தர்சினி
05. பா.டிலானி
06. பா.கிதியோன்
07. பா.கோமதி
08. வி.அனுராதா
09. பா.அனுசியா
10. பா.அனுகரன்
11. நா.அன்னாள்
12. நா.கிறிஸ்ரீன்
13. நா.கிறிஸ்தீனா
14. நா.கிருஷன்

**யாழ்ப்பாணம்**
15. எப்.ஜெசிதரன் +

**கனடா**
16. குகன் குடும்பம் +

**பாண்டவெட்டை**
17. ம.சிவகௌரி +
18. ம.நிம்சிகா +

**மானிப்பாய்**
19. எம்.ஜெயந்தினி +



* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்




போதகர் வே.மகாராஜா

சென்ற இதழின் தொடர்ச்சி....

# ஊழியனின் இதயத்தூய்மை

நேர்மையான / சரியான உள்ளான நிலை தான் எமது வெளியான வாழ்வைத் தீர்மானிக்கின்றது. தாவீதின் இருதயம் கெட்டுப்போவதற்கு அவர் தன் மனித ஆவியின் எண்ணத்துக்கு / ஒரு மனிதன் தன்னகத்தே கொண்டுள்ள வாழ்வு முறைமை / இதைத் தான் செய்ய வேண்டும் அல்லது இது தவறு, இது தவறின்மை என மனிதனுக்குச் சொல்லிக் கொடுக்கும் உள்ளான சரியான நிலையில் இருந்து அவருடைய மனித ஆவி தவறிவிட்டதே காரணமாகும். மனிதனின் ஆவி தேவனுடைய நியமச் சட்டங்களை மீறுவதற்கு துணிகரங்கொள்ளக் கூடாது.

தேவனைப் பற்றிய சிறப்பான அறிவையும் அவருடனான உறவையும் கொண்டிருந்த தாவீது ராஜா; சுத்தமான இருதயத்தையும் நிலைவரமான ஆவியையும் தேவனிடம் கேட்பதென்பது அவருடைய முழு உள்ளான வாழ்வினதும், வேறு எவ்வழியிலும் ஈடு செய்ய முடியாத சீரழிவையே காண்பிக்கின்றது. தீர்க்கதரிசி உணர்த்தாவிட்டால் இந் நிலை தொடர்ந்திருக்கவே வாய்ப்பு அதிகம்.

எமது மறைவான குற்றங்கள் யாராலும் சுட்டிக்காட்டப்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளாத மனநிலையே இன்று அதிகம். தேவனுடன் ஒரு உண்மையான உறவுடன் ஊழியம் செய்ய வேண்டுமானால் எமது உள்ளான தூய்மைக்குத் தடையாக இருக்கும் எதுவானாலும் அது அறிக்கை செய்யப்பட்டு விட்டுப்படப்பட வேண்டும்.

தாவீதின் அறிக்கையிலே அவருடைய பாவத்தின் உண்மையான நிலை தெரிவிக்கப்படுகின்றது. சுத்த இருதயம் வேண்டும், நிலைவரமான ஆவி புதுப்பிக்கப்பட வேண்டும். இருதயம் பாவத்தால் நிறைந்துவிட்டது, சரியான மனித ஆவியை இழந்துவிட்டேன். மனிதனுக்கு இருக்க வேண்டிய நிதானிப்பு, நேர்மை, சரி – பிழை அறிதல் என்பதில் எந்த மனிதனும் தவறும் போது பிழையான ஒரு ஆவிக்குள் செல்ல முடியும். அப்படிப்பட்ட நிலையிலேயே தொடர்ந்து ஊழியமும் செய்ய முடியும். தேவன் மனிதனுக்குள் வைத்த அந்த ஆவியின் சரியான நேர்மையான செயற்பாடு விழுந்துபோவதில் இருந்து எம்மைப் பாதுகாக்கும். இங்கே தவறியதாலேயே தாவீது தவறு செய்தார்.

ஏற்கனவே பார்த்தவண்ணமாக பரிசுத்த ஆவியானவர் தாவீதை விட்டுச் செல்லவில்லை. அதனாலே தான் "உமது பரிசுத்த ஆவியை என்னிடத்தில் இருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்" என்றார். பரிசுத்த ஆவியானவர் இருக்கும் போது கூட நேர்மையற்ற செயற்பாடுகளுடன், தவறான மனித ஆவியைக் கொண்டிருக்க முடியும். அத்தோடு ஊழியமும் செய்யக் கூடும். ஆனால் இப்படியான நிலை நீண்ட காலத்திற்குத் தாக்குப் பிடிக்காது. அதாவது பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து மனிதனுடன் போராடமாட்டார் என்று வேதாகமம் கூறுகின்றது.

தொடரும்....

---

**எபிரெயர் 9:14 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!**

---






ரேமா

பல வேளைகளில் மனிதனைத் தாக்குகின்ற எதிரிகளில் ஒன்று பெலவீனப்படுத்தும் நிலையாகும். எந்த வயதினரையும் எந்த சூழ்நிலையிலும் பெலன் இழக்கச் செய்து, செயற்படாதவாறு மாற்றிப்போடுகின்றது.




**வாழ்க்கையில், கல்வியில், குடும்பத்தில், தொழிலில் இப்படியே பலதரப்பட்ட நிலைகளில் இதன் தாக்கம் உங்களை தொடர்ந்து வந்து கொண்டிருக்கலாம்.**

கலங்காதீர்! வேதாகமம் சொல்கிறது: **பிலிப்பியர் 4:13இல் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு"** சோர்ந்து போகாதே. தேவ வசனத்தை சத்தமாய் அறிக்கை செய். அது உன் வாழ்வில் கிரியை செய்து பெலனுடன் தொடர்ந்தும் ஜீவனம் பண்ணவும், தேவ சித்தம் உன் வாழ்வில் நிறைவேறவும் கிரியை நடப்பிக்கும்.

---

## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:



**வினாவிடை - 88**

வி.அனுராதா
காரைநகர்

**குறுக்கெழுத்துப் போட்டி - 86**

எப்.ஜெசிதரன்
யாழ்ப்பாணம்



# தன் வாயை ஞானம் விளங்க திறக்கிறாள்




❑ திருமதி. J.பிலிப்

ஒரு கிராமத்தில் இருந்த செல்வந்தருடைய வீட்டில் கோழி பண்ணை ஒன்று இருந்தது. ஒவ்வொரு நாளும் இரண்டு பெண்கள் வந்து அந்த கோழிக்கூட்டை சுத்தம் செய்வது வழமை. ஒரு நாள் அப் பண்ணையின் எஜமாட்டி மாலை நேரம் கோழிக்கூடுகளைப் பார்த்த போது, கூட்டில் சில கோழிகள் இல்லை என்று கண்டு கொண்டாள். எனவே அடுத்த நாள் வேலைக்கு வரும் இரண்டு பெண்களையும் அழைத்து கோழிக் கூட்டில் கோழிகள் களவு போய்விட்டது எனக்கூறினாள், இருவரும் தாங்கள் எடுக்கவில்லை எனக்கூறிவிட்டார்கள். எஜமாட்டிக்கு ஒரு யோசனை வந்தது, இருவரையும் பார்த்தாள், இருவருடைய பதிலையும் நன்றாக கவனித்தாள். திடீரென ஒருத்தியைப் பார்த்து, இதோ என் கோழியின் சில இறகுகள் உன் தலைமுடியில் சிக்கி இருக்கிறது என்றாள். கோழி திருடியவள் நடுங்கி, தன் தவறை ஒத்துக் கொண்டாள். எஜமாட்டியின் ஞானம் விளங்கிய பேச்சு மூலம் களவு கண்டு பிடிக்கப்பட்டது.

அருமையான சகோதரிகளே, இன்று பெண்களின் ஞானமற்ற செயல், ஞானமற்ற பேச்சு, ஞானமற்ற நடத்தை இப்படியான செயல் மூலம் எத்தனையோ குடும்பங்களில் சண்டைகள், வைராக்கியங்கள், கோபங்கள், எரிச்சல்கள், பொறாமைகள் போன்றவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட பெண்களுக்கு வேதம் கூறுவது: **கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் - நீதிமொழிகள் 9:10.** உனக்கு ஞானம் வேண்டுமானால் நீ செய்ய வேண்டிய ஒரே காரியம், **உன்னை இரட்சித்த உன் ஆண்டவருக்கு எல்லாக் காரியங்களிலும் நீ**

பயப்பட **வேண்டும்.** அப்போது தேவ ஆசீர்வாதம் உன் பக்கம் இருக்கும்.

வேதாகமத்தில் **1சாமுவேல் 25:17**இல் அபிகாயிலின் குடும்பத்திற்கு பொல்லாப்பு வருகிறதை அறிந்த வேலைக்காரர் அதை அபிகாயிலுக்கு தெரிவித்தார்கள். அபிகாயில் உடனே ஞானமாய் செயற்பட ஆரம்பித்தாள். தன் கணவனின் நிலைஅறிந்த அபிகாயில் இக் காரியத்தை அவனுக்கு ஒன்றும் அறிவிக்காமல் ஞானமாய் சிந்தித்தாள், அதன்படி செயற்பட ஆரம்பித்தாள். அவள் ஞானமாய் நடந்து கொண்டாள்.

இது எப்படி என்று சிந்திக்கிற சகோதரியே, இந்த சம்பவத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அபிகாயில் தீவிரமாய் செயற்பட்டாள். **1சாமுவேல் 25:18-19 (18.) அப்பொழுது அபிகாயில் தீவிரமாய் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல்பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக் குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்து, கழுதைகள்மேல் ஏற்றி, 19. தன் வேலைக்காரரைப் பார்த்து: நீங்கள் எனக்கு முன்னே போங்கள்; இதோ, நான் உங்கள் பின்னே வருகிறேன் என்று சொல்லி அனுப்பினாள்; தன் புருஷனாகிய நாபாலுக்கு அதை அறிவிக்கவில்லை.** கோபத்துடன் நிற்கும் தாவீதைக் கண்டவுடன் செயற்பட ஆரம்பிக்கிறாள். முதலாவது பணிவுடன் தன்னை தாழ்த்துகிறாள். பின் தன் வாயை ஞானம் விளங்க திறக்கிறாள். பேசுவதற்கு அனுமதி கேட்ட பின், தன் கணவனைப் பற்றியும், அவனுடைய நிலையைப் பற்றியும் ஞானமாய் பேசுகிறாள். கர்த்தருக்கு பயப்படுகிற மனிதன் தாவீது என்பதை அறிந்தவள் ஞானமாய் கர்த்தரையே முன்வைத்து பேச ஆரம்பிக்கிறாள்.

**கர்த்தர் இரத்தம் சிந்த உம்மை விடவில்லை; கர்த்தர் உமக்கு நிலையான வீட்டைக் கட்டுவார். நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாது. கர்த்தரின் ஆதரவு உமக்கு இருக்கிறது. கர்த்தர் உமக்கு நன்மை செய்வார். நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், பழிவாங்காமலும் இருந்ததுண்டானால் துக்கம் இராது. மன இடறலும் இராது. கர்த்தர் நன்மை செய்யும் போது அடியாளை நினைப்பீராக** என்று ஞானமாய் பேசிமுடித்தாள். தாவீது நாபாலுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போட திட்டமிட்டுக் கொண்டிருந்தான். என்ன ஆச்சரியம்? கோபத்துடன் இருந்த தாவீதின் செயற்பாட்டை அபிகாயில் ஞானம் விளங்க வாயை திறந்து மாற்றி விட்டாள். உடனே தாவீது அபிகாயிலைப் பார்த்து. **உன்னை இன்றைய தினம் சந்திக்க அனுப்பிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.** அபிகாயில் ஞானமாய் யோசித்து பேசியதின் நிமித்தம் அவளுடைய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக என்று சொல்லி அபிகாயிலை ஆசீர்வதித்து சமாதானத்துடன் அனுப்பி வைக்கிறான் தாவீது.

பெரிய ஒரு அழிவு உண்டாகாமல் தடுத்து நிறுத்தியது, ஒரு பெண்ணின் வாய் ஞானமாய் பேசியதின் நிமித்தமாக.

சகோதரியே, கிறிஸ்துவை அறிந்த அனேக குடும்பங்களில் இன்று கணவன் – மனைவி, மாமி — மருமகள், அக்கா — தங்கை போன்ற உறவுகளில் காணப்படும் பிணக்குகளுக்கு காரணம் ஞானமற்ற யோசனை, செயல்,

பேச்சுக்கள் ஆகும். ஆனால் **கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும் - நீதிமொழிகள் 15:33.**

அபிகாயில் தான் தேடி வந்த சமாதானத்தை தாழ்மையுடனும், சாந்தத்துடனும் ஞானமாய் நடந்து பெற்றுக்கொண்டாள். **உங்கள் குடும்பங்களில் சண்டைகள், குழப்பங்கள் ஏற்படுமாயின் தேவனுடைய பாதத்தில் அவற்றை வைத்து சாந்தத்தோடு தேவன் கொடுக்கும் ஞானத்தோடு நடந்து சமாதானத்தை உண்டாக்குங்கள்.**

**சகோதரிகளே, கர்த்தரை முன் வைத்து சாந்தமும் அமைதியான ஆவியைப் பெற்று கணவன் மாருக்கு கீழ்ப்படிந்து, பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, ஞானமாய் நடந்து கொண்டால் அவர்கள் குடும்பங்களில் தெய்வீக சமாதானம் நிலவும். ஆண்டவரின் கிருபையை சார்ந்து, ஞானமாய் சிந்தித்து, பேசி நடந்தால் உங்கள் குடும்பங்களில் கர்த்தர் சமாதானத்தை கட்டளையிடுவார்.**

**நீதிமொழிகள் 8:33 நீங்கள் புத்தியைக் கேட்டு, ஞானமடையுங்கள்; அதை விட்டு விலகாதிருங்கள்.**

# படித்ததில் பிடித்தது

*மன்னர் ஒருவன் வேட்டையாடப் போவதற்கு முன் தனது அமைச்சரை அழைத்து, "மழை வருமா?" எனக் கேட்டான்.*

*"வராது" என்றான் அமைச்சன்.*

*வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த குடியானவன் ஒருவன் கொஞ்ச நேரத்தில் மழை வரும் என எச்சரித்தான்.*

*அதைப் பொருட்படுத்தாமல் போன மன்னன் வேட்டை ஆடிக் கொண்டிருந்த போது கடும் மழை வந்து நன்றாய் நனைத்து போனான்.*

*திரும்பும் வழியில் குடியானவனைச் சந்தித்து, "மழை வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?" எனக் கேட்டான்.*

*அவனோ, "மன்னா, எனக்குத் தெரியாது. ஆனால் என் கழுதைக்குத் தெரியும். மழை வரும் முன் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்" என்றான்.*

*உடனே மன்னன் அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு கழுதையை அமைச்சராக்கினான்.*

*இக் கதையை ஆபிரஹாம் லிங்கன் கூறிவிட்டு சொன்னார், "அதில் தான் மன்னன் ஒரு தவறு செய்துவிட்டான். என்னவெனில் அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளும் ஏதாவது பதவி வேண்டும் என அலைகின்றன"*



# சாதனைமிக்க படைத்தளபதியின் வேதனையை மாற்றிய ஆண்டவர்

❑ A.ஆசீர்வாதம்




சீரிய தேசத்தின் இராஜாவினுடைய படைத் தலைவன் நாகமான் சாதாரண மனிதன் அல்ல. இவன் எப்படிப்பட்டவன் என்பதை சத்திய வேதம் சொல்வதை கவனிப்போம்.

• **பெரிய மனுஷன்** – பல விடயங்களை கருத்தில் கொண்டு தான் இவனுக்கு இந்தப் பெயர் வழங்கப்பட்ட துள்ளது. வேதத்தில் பலருக்கும் கிடைக்காத இந்த அரிய பெயர் இவனுக்கு கிடைக்குமளவு உண்மையிலேயே இவன் பெரிய மனிதனாகவே இருந்தான்.

• **எண்ணிக்கையுள்ளவன்** – இது அவனுக்கு கீழே இருந்த ஆட்பலத்தைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். படைத்தளபதி எனும் போது இது சர்வ சாதாரணமாக இருப்பினும் இப் பெயர் அவனுக்கு இருக்கும் பெரிய மதிப்பை எடுத்துக்காட்டுகிறது.

• **சீரிய தேசத்திற்கு இரட்சிப்பை கொண்டு வந்தவன்** – தனது நாட்டிற்காக பலரிடம் போர் செய்து பெரிய இரட்சிப்பை/விடுதலையை தேசத்திற்கே கொண்டு வந்தவன். இதற்கு ஆண்டவர் தான் உதவி செய்ததாக வாசிக்கிறோம்.

• **மகாபராக்கிரமசாலி** — மற்றவர்களைவிட தம் கிரியைகளில் பெரிய வித்தியாசத்தை இப்படியான குணமுடையவர்கள் கொண்டிருப்பார்கள். வீரமும், பலமும் துணிச்சலும் உடைய ஒருவராக இருந்திருக்க வேண்டும்.

இவ்வளவு சிறந்த தன்மைகளையும் தன்னகத்தே கொண்ட இந்த தளபதிக்கு ஓர் வேதனை இருந்தது. இது மகா வேதனையைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. ஆம் அப்படியானால் அது என்ன? குடும்ப வாழ்வு தோல்வியா? அல்லது எதிர்பார்த்த பெரிய போரில் தோல்வி அடைந்தாரா? பொருளாதார வறுமையா? உறவுகளின் பிரச்சினைகளா? அல்லது கூட இருந்தவர்களின் துரோக செயலா? இல்லை, இல்லவே இல்லை. ஒருவேளை இவை அத்தனையும் இருந்தால் கூட அவை கூட

அத்தனை வேதனை இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இல்லாவிடில் இவற்றுக்கு அவர் முடிந்தளவு தீர்வைக் கண்டு அத்தகைய வேதனையை மாற்றியிருப்பார். **ஆனால் இந்த வேதனையை அவர் மட்டுமன்றி, அவரது குடும்பமோ அல்லது சீரிய இராஜவோ அல்லது அந்த நாட்டிலுள்ள ஒருவராகிலும் எதுவுமே செய்ய முடியாத மகா வேதனையை அனுபவித்தார். அது என்ன தெரியுமா? "குஷ்டரோகம்" என்ற வியாதி தான்.**

எல்லா வியாதிகளுமே சரீரத்தில் வேதனையை உண்டாக்குபவை தான். ஆனால் குஷ்டரோகம் சரீரத்திலும், உள்ளத்திலும், சமூகத்திலும் கூட பாதிப்பை ஏற்படுத்தும். எல்லா நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் அனுபவித்து வந்த இந்த தளபதிக்கு இந்த ஓர் வியாதி பல நிலமைகளில் வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. **மருத்துவர்களாலும் ஏதும் செய்ய முடியவில்லை. அவருடைய படையோ, பணமோ ஒன்றும் செய்ய முடியவில்லை. அவரது புகழ், செல்வாக்கு, மதிப்புக்களால் ஓர் உதவி கூட செய்ய முடியவில்லை. அவருடைய உறவுகள் பல இருந்தும் ஒருவர் கூட உதவ முடியாத சூழ்நிலை. மிக மிக துக்கமான சூழல்.** வெளியே சந்தோஷப்பட்டாலும் உள்ளத்தில் மகா வேதனை. வெற்றிகள் பல கிடைத்தாலும் மன நிறைவற்ற, சமாதானமிழந்த நிலை. பல இரவுகள் கண்ணீரோடு கழிந்தன. எதிர்காலத்தைக் குறித்த பயம், சரீர புண்களின் எரிவு, வேதனையை பரிசாக கொடுத்துக்கொண்டே இருந்தது. என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் வாழ்வின் நாட்கள் சென்று கொண்டே இருந்தது.

ஆம்! **இதை வாசிக்கும் நண்பரே இது போன்ற சூழ்நிலை உமக்கும் உண்டா? பல விடயங்கள் ஆசீர்வாதமாய் அமைந்தும் ஒரு சில காரியங்கள் உங்களை வேதனைப் படுத்துகின்றதா? என்ன செய்வது என்று தெரியாத சூழ்நிலை உமக்கு உண்டா? எங்கே போவேன், யார் எனக்கு உதவி செய்வார், இந்த சூழ்நிலை எப்போது மாறும்? எனது எதிர்காலம் எப்படி அமையும்?.... என்று கேள்விகளுடன் அங்கலாய்க்கும் ஒருவரா?**

ஜெபத்துடன் தொடர்ந்தும் வாசியுங்கள். ஏனெனில் இந்த நாகமானின் சரீரம் மாற்றம் பெற போகின்றது. அதற்கு உதவி செய்த அதே ஆண்டவர் இன்றும் ஜீவிக்கின்றபடியால் உங்களது சூழ்நிலையையும் மாற்றியமைக்க அவர் வல்லவராய் இருக்கிறார்.

சுகம் பெறுவதற்காக நாகமான் சில காரியங்களை செய்ய வேண்டியிருந்தது.

## 01. அடிமையான சிறு பெண்ணின் சொல்லை நம்ப வேண்டியிருந்தது.

**இந்த சீரியனாகிய நாகமான் இஸ்ரவேல் மேல் யுத்தம் செய்து அங்கேயிருந்த ஓர் சிறுபெண்ணை அடிமையாக்கி தன் வீட்டிலே பணிக்கு அமர்த்தியிருந்தான். அந்த பெண்தான் இவருக்கு தனது நாட்டிலுள்ள ஒரு தீர்க்கதரிசியிடம் செல்லுமாறு அறிவுரை கொடுக்கிறாள். இந்த வார்த்தையை அவன் விசுவாசித்தான். ஆகவே அங்கே செல்ல தீர்மானிக்கிறான்.**

உண்மையில் அந்த தீர்க்கதரிசி எலிசா என்ற ஓர் சாதாரண மனிதன் தான். தேவனாகிய கர்த்தர் தான் அவரைக் கொண்டு

பல அற்புதங்களை நடப்பித்துக் கொண்டிருந்தார். ஆகவே நாகமான் தேவனாகிய கர்த்தரிடம் செல்லவே தீர்மானித்து செல்கிறார் என்பதை சிந்தையில் கொண்டிருப்போம்.

**தேவனாகிய கர்த்தரை நம்பி வந்தவர்களை அவர் புறம்பே தள்ளுவதுமில்லை, வெறுமையாய் அனுப்புவதுமில்லை. தன்னிடம் வரும்படி யாரையும் கட்டாயப் படுத்தாத இந்த தேவன் தன்னிடம் வந்தவரை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கிறார்.**

ஏதோ ஓர் குழப்பத்தோடே, சோதனையோடே இருக்கும் நண்பரே நாம் செல்ல வேண்டிய ஓர் இடம் உண்டு. அது தான் சிலுவை நிழல். இங்கே தஞ்சமாக வந்த ஒருவரும் வெட்கப்பட்டுப்போவதில்லை. இயேசு கிறிஸ்து இன்றும் உயிரோடு இருப்பவராய் உங்களுக்கும் அற்புதம் செய்ய ஆவலோடே இருக்கின்றார். இந்த வார்த்தைகளை விசுவாசித்து இங்கே வரவேண்டியது ஒன்றையே நாம் செய்ய வேண்டும்.

இந்த நாகமான் நிலைமையை பற்றி யோசித்து பாருங்கள். தனது பாரம்பரிய தெய்வங்களைவிட்டு, தனது நாட்டிலுள்ள தெய்வங்களை விட்டுவிட்டு இன்னொரு நாட்டுக்கு அதுவும் இவர்கள் வெற்றி பெற்ற நாட்டிற்கே மீண்டும் உதவி பெற செல்வது வியப்புக்கும் நகைப்புக்கும் உரியது. ஆயினும் இதை எல்லாம் மீறி அவர் அங்கே சென்றார்.

சில **பரிகாரங்கள், நிந்தனைகள், அவமானங்களை தாண்டியே தான் இயேசுவண்டை வரவேண்டியிருக்கும். ஆனால் கவலை வேண்டாம்! தயக்கம் வேண்டாம்! பயம் வேண்டாம்! அந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆவலோடே உங்களை நேசித்து அன்பு கூருகிற மெய்யான ஆண்டவராய் காத்திருக்கிறார். நம்பிக்கையோடே வருவீரா!!**

## 02. தேவ மனிதனின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டியிருந்தது

சுகம் கட்டாயம் கிடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்புடன் தேவ மனிதனாகிய எலிசாவின் இருப்பிடம் தேடி நாகமான் வந்திருந்தான். வந்தவனுக்கு கிடைத்த செய்தி **"நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு, அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்"** என்பதே. இதைக் கேட்டதும் கடுங்கோபத்துடன் மறுபடியும் வீடு திரும்ப நாகமான் முடிவெடுத்தான். ஆயினும் அவனது ஊழியக்காரர் வேண்டுதலினால் அந்த காரியத்தை அப்படியே செய்ய தீர்மானம் எடுத்தான். **ஆம் என்ன ஆச்சரியம்!! அவனது மாம்சம் மாறி சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல சுத்தமானது. அற்புதமான சுகம், இதுவரை அடையாத பெரிய சந்தோஷம், எண்ணிலடங்கா ஆனந்தம். வாழ்க்கை முழுவதும் மாறியது! இனிமையாய் அமைந்தது!**

இதே காரியத்தை உங்களுக்கும் செய்ய இயேசு கிறிஸ்து இன்றும் வல்லமை உள்ளவர். அவரண்டை வந்து கற்றுக் கொண்டு அவற்றிற்கு கீழ்ப்படிய உங்களை அர்ப்பணியுங்கள். நீங்கள் எதிர்பாராத வகையில் உங்கள் வாழ்வு மாறும். அது இனிமையாக அமையும். பலருக்கும் ஆசீர்வாதமாகவும் அமையும்.

*(இந்த சத்தியங்கள் பரிசுத்த வேதாகமத்தின் 11இராஜாக்கள் 5ஆவது அதிகாரத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது)*




# பீட்டர் கிளேவர்
# 1580 - 1654



## அடிமைகளின் அடிமையாக...

ஸ்பெயின் நாட்டில் கி.பி 1580ஆம் ஆண்டு பிறந்தார் பீட்டர் கிளேவர். பல்கலைக்கழக படிப்பை முடித்த பின் 1602ஆம் ஆண்டு இயேசு சபையில் மாணவனாக சேர்ந்தார். பின்னர் இவர் மயோர்க்கா என்ற நகரிலிருந்த இயேசு சபை கல்லூரியில் மேற்படிப்பு படித்தார்.

அங்கு அப்போன்ஸ் ரொதிரிகஸ் என்பவர் வாயிற்காப்போனாக பணியாற்றி வந்தார். அவர் இவரை மேற்கிந்திய தீவுகளுக்கு மிஷனெரியாக செல்ல தூண்டுதல் கொடுத்தார்.

1616ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்ற பின், நீக்ரோ அடிமைகளிடம் தனது அருட்பணியை ஆர்வமுடன் தொடங்கினார்.

இன்று கொலம்பியா என்று அழைக்கப்படும் கார்த்தஜினாவில் அடிமை வாணிகம் அப்போது உச்ச நிலையில் காணப்பட்டது. எனவே, அந்த அடிமைகளின் நண்பராகவும், அவர்களுக்கு மருத்துவராகவும், ஆலோசனை கொடுப்பவராகவும், அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பெறுபவராகவும் மிகவும் அன்புடன் நடந்து கொண்டார்.

ஆப்பிரிக்காவிலிருந்து கப்பல் கப்பலாக இறக்குமதி செய்யப்பட்ட அந்த அடிமைகளுக்கு உதவி செய்ய மருந்து மாத்திரைகளுடன் விரைந்து சென்ற இவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஐயோ! அவர்கள் ஆடு மாடுகளை விட மிகவும் கீழ்த்தரமாக கூண்டிற்குள் அடைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டனர். ஒவ்வொரு கூண்டிலும் மூன்று பேர்

அடைக்கப்பட்டதில் ஒருவராவது இறந்த நிலையிலேயே கரையை வந்தடைவது வாடிக்கையாக காணப்பட்டது.

இந்த அடிமைகளின் காயங்களை முத்தமிட்டு, அவர்களுக்கு உதவி செய்வது இவர் வழக்கம். இவரின் அன்பைக் கண்ட அவ் அடிமைகள் இயேசு கிறிஸ்துவின் அடியவர்களாக மாறினர். 30 ஆண்டுகளாக அவர்களிடையே பணியாற்றிய இவர், ஏறத்தாள 3 இலட்சம் அடிமைகளுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி எடுத்துரைத்தார். தாம் எழுதும் கடிதங்களின் கீழே "அடிமைகளின் அடிமை" என்றே இவர் கையெழுத்திடுவார். இவ் அடிமைகளுக்காக அயராது உழைத்த இவர், 1654ஆம் ஆண்டு நித்திரையடைந்தார்.

**அன்பரே! பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிக்க நீர் ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இந்த அடிமைகளிடம் முதலில் நாம் வாயால் பேசுவதை விட்டுவிட்டு நமது தொண்டு நிறைந்த கைகளால் பேசவேண்டும் — பீட்டர் கிளேவர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" அக்டோபர் 15**



# நவமணி அன்னபாய்
# 1935 - 2006

## இயேசுவை திருட முடியாது

அது ஒரு புல் வீடு. கல்வராயன் மலையில் ஆதிவாசிகள் வசிக்கும் பகுதி. ஒரு நாள் சில திருடர்கள் அவ்வீட்டிற்குள் புகுந்தனர். வீட்டுத் தலைவியின் தாலிச் செயினை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். அக்கம் பக்கத்தார் செய்தி அறிந்தனர். விரைந்து வந்தனர். திருட்டு நடந்ததை எண்ணி வருந்தி நின்றனர்.

வீட்டின் தலைவி சுற்றி நின்றவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார்: "தாலியைத் தானே திருடிச் சென்றனர்; அவர்களால் என்னுள் இருக்கும் கிறிஸ்துவைத் திருட முடியவில்லையே" என்னே பதில் இது! அவ் அம்மையார் யார் தெரியுமா?

மலைவாழ் மக்களின் அன்னையாய், அறிவூட்டும் நல்ல ஆசிரியராய் வாழ்ந்து ஆலயங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள் அமைத்திட்ட எலியாஸ் ஐயரின் அருமைத் துணைவி "பெரிய டீச்சர்" என்றழைக்கப்படும் நவமணி அன்னபாய் என்பவர்களே ஆவார்.

ஒருமுறை, நவமணி அன்னபாய் ஆசிரியர் பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்காமல் கிறிஸ்தவ மத போதனைகளைக் கற்றுக் கொடுக்கிறார் என்று சில

சுயநலமிகளால் கல்வி அதிகாரிக்கு புகார் கொடுக்கப்பட்டது. அதிகாரிகள் அம்மையாரிடம் விசாரித்தனர். அம்மையார் அவர்களுக்குத் தகுந்த பதிலைக் கூறனார். அதிகாரிகளோ, "நாங்களும் தாவீது, சாலமொன் மற்றும் யோபுவைப் பற்றியெல்லாம் படித்திருக்கிறோம். பிள்ளைகளுக்கு நல்ல உபதேசம் கற்றுக் கொடுப்பதில் தவறில்லை" என்று கூறிவிட்டு கெம்பீரமாகத் திரும்பிச் சென்றனர்.

கல்வராயன்மலை மற்றும் சேராப்பட்டு மலைவாழ் மக்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்து 21 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார். அங்கு பள்ளிக்கூடம் இவராலே ஆரம்பிக்கப்பட்டது. எதிர்ப்புகள் வந்த போது ஜெபத்திலேயே அவைகளை வென்றார். கல்வராயன், ஜவ்வாது, கொல்லி மலைகளில் அயராது உழைத்த இவர், தாம் விரும்பியபடியே அக் கொல்லி மலையிலேயே அம் மக்களுக்காகத் தன் உயிரைக் கொடுத்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்.

**அன்பரே! மலைகளில் வாழும் மக்களைக் குறித்த ஏக்கம் உங்களிடம் உண்டா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** அவிசுவாசிகளுக்கு வேதத்தை போதிக்க நாம் மறந்தால் ஆண்டவர் நம்மையும் மறந்துவிடக்கூடும். — வேதாகம நண்பன்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீலை 20**

---

# தேவன் தந்த வைரங்கள்



**பரிசுத்தவான் தேவனுடன்**
**எப்போதும்**
**உறவுடன் இருப்பவன்**




*ஜெபமில்லாத ஊழியத்தில்*
*காணப்படும் ஆசீர்வாதங்களும்*
*போலியானவைகளே*



**பலரால் வெல்லப்படாத**
**ஒன்று சுயத்தில் வாழுதல்**

# குறுக்கெழுத்துப் போட்டி – 87

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ✿ | | | 01 | | | ✿ | | 02 |
| 04 | | ✿ | | ✿ | 03 | | | |
| ✿ | 05 | | | | | | | |
| ✿ | | 06 | ✿ | | | | | |
| ✿ | | | ✿ | 09 | | 08 | 07 | |
| | | ✿ | | | | 10 | 11 | ✿ |
| | ✿ | | 13 | ✿ | ✿ | 12 | | |
| | ✿ | | | | 14 | | | |
| 16 | | | | | ✿ | | | 15 |



**இடமிருந்து வலமாக**

01. கர்த்தருடைய ஆலயத்தில் ஆறு வருடம் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ராஜகுமாரன்
04. எங்கள் அந்தரங்கப் பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர் எனப்பாடியது
16. தேவனுடைய ஆலயம் அதன் ஸ்தானத்திலே கட்டப்பட வேண்டும் என்று சொன்னவர்

**வலமிருந்து இடமாக**

01. புதிய ஏற்பாட்டில் பொற்கச்சை கட்டினதாக தரிசனத்தில் கண்டவர்
10. கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அறியாதிருந்தவன்
13. பிறக்கும் போது கையில் சிவப்பு நூல் கட்டப்பட்ட பிள்ளை
14. யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தவன்

**மேலிருந்து கீழாக**

01. சூரியனையும் சந்திரனையும் நடுவானில் தரித்து நிற்கப்பண்ணியவன்
02. கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னவன்
03. இவன் மயிரை வளர்த்ததால் உயிருக்கு சேதம் வந்தது
05. ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுத பெண்
06. "என் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது" என்றவர்
11. .......... ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான்
12. "நான் இளவயதுள்ளவன்" என்று கூறியவன்

**கீழிருந்து மேலாக**

06. தேவன் தம்முடைய வலையை என்மேல் வீசினார் என்று சொன்னவர்
07. இவர் அகாயா நாட்டு அதிபதி
08. தான் பிறந்த நாளைச் சபித்தவர்
09. இவர் சோவாருக்குள் வரும் போது பூமியின் மேல் சூரியன் உதித்தது
15. மனுஷனுடைய இருதயத்தை ஒடுக்குவது
16. நான் ஒரு நாயா எனக்கேட்டு தன் தேவர்களைக் கொண்டு சபித்தவன்




வை. விமலதாஸ்

ஒரு நாள் ஒரு மனிதர் தன்னுடைய அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமே என அவசர அவசரமாக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவர் எப்போதும் தன்னுடைய அலுவலகத்திற்கு சைக்கிளில் தான் செல்வார். அன்று காலையில் மனைவி சமையல் செய்வதற்கு சற்று தாமதமாகியமையால் அவரைத் திட்டிக்கொண்டே புறப்பட்டார். *இன்று ஏன் இவ்வளவு நேரம் சென்றுவிட்டது, நேரத்தோடு எழுந்து சமையல் செய்யத் தெரியாதா?* என்று கேட்டு கோபத்துடனும், அன்றைக்கு அவருடைய அலுவலகத்தில் முக்கியமான ஒரு கலந்துரையாடல் இருந்தமையால் வழமையைவிட அவசரத்துடனும், தன்னுடைய சைக்கிளில் புறப்பட்டார்.

அவ்வாறு அவர் சென்று கொண்டிருந்த அந்த காலை நேரத்தில் வீதி வெறுமையாக காணப்பட்டது. எப்போதும் இவர் தன்னுடைய சைக்கிளில் அலுவலத்திற்கு செல்வது இவருக்கு மிகவும் பிடித்தமான காரியமாக இருந்தது. ஏனென்றால் இவர் போகும் நேரத்திலும் இவர் அலுவலகம் முடிந்து வீடு வரும் நேரத்திலும் யாரும் அந்த வீதியால் செல்லமாட்டார்கள். அந்த வீதியின் இரு மருங்கிலும் அழகிய மரங்களும், பூஞ்செடிகளும் காணப்பட்டன. இவர் அவற்றை பார்த்து ரசித்துக் கொண்டு, தனிமையாக பாடல்களைப் பாடிக்கொண்டே தன் சைக்கிளை ஓட்டிச்செல்வார். இன்றைக்கும் அவர் அவ்வாறு வழமையாக செய்வதைப் போன்று தன் சைக்கிளை ஓட்டிச்சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வீதியால் இன்னொருவர் சைக்கிளில் வந்து அவரை முந்திக் கொண்டு செல்ல ஆரம்பித்தார். முந்திச் சென்ற அந்த மனிதர் மிகவும் வேகமாக சென்று கொண்டிருந்த போது இவருக்குள் ஒரு எண்ணம் ஓட ஆரம்பித்தது. *என்ன இவர் என்னை முந்திக் கொண்டு செல்கிறாரே, நான் அவ்வளவு மெதுவாகவாக சைக்கிளை ஓடுகின்றேன்.*

*எவ்வாறென்றாலும் இவரை நான் இன்றைக்கு முந்திச் சென்று காட்ட வேண்டும்* என்று.

ஆகவே இப்போது எப்படியாவது தன்னை முந்திச் செல்பவரை தான் முந்திச் சென்றாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தன் சைக்கிளை மிக வேகமாக மிதிக்க ஆரம்பித்தார். இவர் எவ்வளவுக்கு வேகமாக மிதித்து முன்னேறிச் செல்ல முற்பட்டாரோ அதைவிட வேகமாக முன்னே சென்ற நபர் தன் சைக்கிளை மிதித்து முன்னே சென்று கொண்டிருந்தார். இவருக்கோ இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. *நான் எவ்வளவு முயற்சி செய்து அவரை முந்திச் செல்ல வேண்டும் என்று முற்படுகின்றேன், ஆனால் அவர் என்னை முந்த விடாமல் சென்று கொண்டிருக்கிறாரே, இவரை விடக்கூடாது, எப்படியென்றாலும் நான் இவரை முந்திக்காட்டியே ஆக வேண்டும்* என்ற எண்ணத்தில் இன்னும் வேகமாக சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தார். இவர் செல்லும் வேகத்தில் அவரை முந்திவிடலாம் போன்று தோன்றும் ஆனால் முன்னே செல்பவர் அதைவிட வேகமாக சென்றுவிடுவார்.

இப்போது இவர் தன் அலுவலக கலந்துரையாடலுக்கு நேரத்துடன் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து எப்படியாவது முன்னே செல்கிற நபரை முந்திவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் சைக்கிளை ஓட்ட ஆரம்பித்தார். இவ்வாறு வேகமாக சென்றவர் இப்போது ஒருவாறு முன்னே சென்று கொண்டிருந்த நபரை முந்தி அவருக்கு முன்னே தன் சைக்கிளை ஓட்ட ஆரம்பித்தார். அவரை முந்திய இவருக்குள் இப்போது பயங்கரமான சந்தோஷம். நான் எப்படியோ எனக்கு முன்னே சென்ற நபரை முந்தி சைக்கிளை ஓட்டிவிட்டேன் என்று சிறுபிள்ளையைப் போல மனதிற்குள் சந்தோஷப்பட்டார். அந்த சந்தோஷம் சிறிது நேரம் தான் நீடித்தது. ஏனென்றால், இப்போது நான் முந்திவிட்டேன், இனி என் அலுவலகத்திற்கு செல்வோம் என்ற எண்ணத்துடன் வீதியில் காணப்பட்ட பெயர்ப்பலகையை பார்த்த இவருக்கு பெரும் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

ஆம், எப்போதுமே இவர் அந்த வீதியால் செல்லும் போது தன் அலுவலகத்திற்கு திரும்புவதற்கு வீதியில் முதலாவது வரும் வளைவில் வலப்பக்கம் திரும்ப வேண்டும். அவ்வாறு வலப்பக்கம் திரும்பினால் தான் அவர் தன்னுடைய அலுவலகத்திற்கு செல்ல முடியும். ஆனால் இன்று அவர் தனக்கு முன்னே சென்ற மனிதனை முந்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தமையால் அவர் தான் வலது பக்கம் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தை மறந்தவராய், அலுவலகத்திற்கு செல்லும் இடத்தை தாண்டி நான்கு கிலோ மீற்றர் தூரம் மேலதிகமாக வந்துவிட்டார். இப்போது அவர் அலுவலகம் செல்ல வேண்டுமாயிருந்தால் திரும்ப நான்கு கிலோ மீற்றர் தூரம் பின்பதாக திரும்பிச் செல்ல வேண்டும். அவருக்கு இப்போது மிகவும் கலக்கமாக இருந்தது, அலுவலகத்தில் இன்று முக்கியமான கலந்துரையாடல் இருந்தது, நான் ஏதோ தேவையில்லாத காரியத்திற்காக என்னுடைய முக்கியமான காரியத்தை தவறவிட்டுவிட்டேனே என்று பயமும் அதிர்ச்சியும் அடைந்தார். இவர் இப்போது தன் அலுவலகத்திற்கு திரும்பிச் செல்லும் போது யாரை இவர் முந்திக் கொண்டு வந்தாரோ அவரை கண்டு தான் செல்ல வேண்டும். இவற்றை நினைக்கும் போது இவருக்குள் ஒரு வெறுமையும், பயமும், வெட்கமும் உண்டாகியது.


ஆம் நண்பர்களே, இந்த மனிதனின் முழு நோக்கமும் எப்படியாவது முன்னே செல்கிற நபரை முந்திச் சென்றுவிட வேண்டும் என்பதாக இருந்தமையால் அவர் எங்கே செல்ல வேண்டுமோ அங்கே செல்லாமல் வேறு எங்கேயோ வந்து பிரயோசனமற்றவராக நடு வீதியில் நின்று கொண்டிருந்தார். அந்த இடத்தில் இருந்து அந்த மனிதன் இன்று நான் செய்த இந்தக் காரியத்தினால் எனக்கு என்ன நன்மை கிடைத்தது என்று யோசித்துப் பார்த்த போது அதினால் அவனுக்கு எந்தவிதமான நன்மையும் பிரயோசனமும் இல்லை என்பதைக் கண்டு கொண்டான். இதைப் போலவே நம்முடைய வாழ்க்கையிலும் சில காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்மில் பலர் செய்யும் காரியங்கள் எதற்காக செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? என்ற எண்ணமும் நோக்கமும் இல்லாமல் மற்றவர்களைப் பார்த்து நாமும் செய்து கொண்டிருக்கிறோம். உலகத்தின் சில காரியங்களுக்காக அதைத் தொடர்ந்து நாமும் வேகமாக ஓடிக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் இந்த ஓட்டத்தை சிந்தித்துப் பார்த்தால் அதனால் ஒரு நன்மையும் இல்லை என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். நாம் தொழில் செய்யும் இடத்தில், படிக்கும் இடத்தில் என எல்லா இடங்களிலும் மற்றவர்களைப் பார்க்கிலும் நான் முக்கியமானவனாகத் தெரிய வேண்டும், வித்தியாசமாக தெரிய வேண்டும் என்று நினைத்து சில காரியங்களை செய்கிறோம். அவ்வாறு நினைப்பது தவறானதும் அல்ல, ஆனால் நாம் மற்றவர்களையே எப்போதும் பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. அவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள், அவர்களைக் குறித்து மற்றவர்கள் நன்றாக பேசுகிறார்களா? என்று பார்த்து மற்றவர்கள் மேல் பொறாமை கொள்கிறவர்களாக மாறிவிடுகின்றோம். மாறாக நாம் எமக்கு கொடுக்கப்பட்ட வேலையில் தான் நாம் கவனம் உள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். **நீதிமொழிகள் 13:18 புத்திமதிகளைத் தள்ளுகிறவன் தரித்திரத்தையும் இலச்சையையும் அடைவான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான்.**

---

அன்பின் அனல் வாசகர்களே!

கடந்த இதழில் கேட்கப்பட்ட வினா விடைக்கும், குறுக்கெழுத்துப் போட்டிக்கும் அனேகர் விடைகளை எழுதி அனுப்பியிருந்தீர்கள். உங்களது வேதாகம அறிவை வளர்த்துக் கொள்ள நீங்கள் எடுத்துக்கொண்ட உற்சாகத்திற்காக எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதில் அனேகர் தவறான விடைகளை எழுதியமையால் அனைவரினதும் பெயர்களை பிரசுரிக்க முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்ந்து சரியான விடைகளை எழுதி உங்கள் வேதாகம அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். அத்துடன் பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் தொடர்ந்து இப் போட்டியில் கலந்து கொள்ள உற்சாகப்படுத்துங்கள்.





# நம்மிடம் தவறு இருந்தால்

## வேதப்பகுதி: சங்கீதம் 26:1–12

ஞானசீலன் தனக்கு அஜய் என்ற மாணவன் தொல்லை கொடுப்பதாக ஆசிரியரிடம் சொல்வதற்கு சென்றான். ஆனால் ஆசிரியர் ஞானசீலனைப் பார்த்த உடனேயே, "சீலன் இங்கே வா, நேற்று நீ கால்பந்து விளையாடும் போது விக்ரமின் முகத்தில் வேண்டுமென்றே பந்தை வீசினாயாமே" என்றார். சீலன் அதை மறுக்கவில்லை. குற்றவாளியைப் போல் நின்றான். எனவே அஜய்யைக் குறித்து ஒன்றும் சொல்லாமலே திரும்பிவிட்டான்.



ஆம்! இன்னொருவருடைய குறைவை சொல்ல வேண்டுமானால் நம்மிடம் குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாமும் தப்பு செய்திருந்தால் பிறருடைய தவறை நாம் சொல்ல நமக்க தகுதி இருக்காது. கர்த்தர் நமக்கு நியாயம் செய்வார். ஆனால் நாம் யாருக்கும் அநியாயம் செய்திருக்கக்கூடாது. கர்த்தரிடம் நாம் நல்லதைக் கேட்கலாம். ஆனால் நாம் யாருக்கும் தீமை செய்திருக்கக்கூடாது. அப்படி செய்திருந்தால் அதற்காக முதலாவது தேவனிடம் மன்னிப்பு கேட்டு நம்மை சரிசெய்ய வேண்டும்.

**சிந்தனைக்கு:–** நம்மிடம் தவறு இருக்கையில் பிறருடைய தவறைக்கூற நமக்கு தகுதியில்லை.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — நவம்பர் 27

# வினா விடை - 89

01. தந்தத்தினால் செய்யப்பட்ட வீடுகளைப் பற்றி வாசிப்பதெங்கே?

02. வலையில் சிக்குண்ட கலைமானைக் குறித்து எங்கே வாசிக்கிறோம்?

03. "தீயை மூட்டு" என்ற தீர்க்கதரிசி யார்?

04. கல்லை நடுவாக நிறுத்தி அதற்கு பேரிட்டது யார்? அந்தக் கல்லின் பெயரென்ன?

05. தந்தத்தினால் செய்த அரமனையைப் பற்றி வாசிப்பதெங்கே?

06. ஒரு எழுத்து மட்டும் உள்ள ஒரு ராஜாவின் பெயரென்ன?

07. கல்லறையினிடம் அழுகிறதற்குப் போனவள் யார்?

08. "நான் ஒன்று செய்கிறேன்" என்றவன் யார்?

09. "பயப்படாதே நீ சாவதில்லை" என்றது யாரை?

10. வெயில் ஏற ஏற உருகிப்போனதென்ன?

---

# இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!


நாங்கள் வானத்திலுமுண்டு; பூமியிலுமுண்டு. எங்களுக்கு ராஜ்யமும் உண்டு; ஆளுகையும் உண்டு. எங்களுக்கு சேனையுமுண்டு; யுத்தமும் உண்டு. எங்களுக்குத் தந்திரமும் தெரியும்; மந்திரமும் தெரியும். பாவிகளையும் கெடுப்போம்; பரிசுத்தவான்களையும் கெடுப்போம். கட்டவும் செய்வோம்; குட்டவும் செய்வோம். மனுஷரைக் கண்ணியிலும் பிடிப்போம்; காவலிலும் போடுவோம். எங்களுக்கு விதைப்புண்டு; அறுப்பில்லை. ஆனால் புடைப்புண்டு. நாங்கள் இயேசுவையும் அறிவோம்; உங்களையும் அறிவோம். நாங்கள் யார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்?

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனல் 2018 ஆடி - ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

## யோபு

ஒரே நாளில் அவன் செல்வத்தையும், பிள்ளைகளையும் இழந்து சரீரத்தில் கொடிய பருக்களால் பட்ட வேதனை



விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 220.00 |
| இந்தியா (India) | 390.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 840.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 420.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 720.00 |

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..................................................................................................

முகவரி:................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 4:30 மணிக்கு**

# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்

**அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்**

- **வியாதிப்பட்டவர்கள்**
- **தேவையுள்ளவர்கள்**
- **பிசாசின் பிடியில் உள்ளவர்கள்**

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

To:

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351